யாழ்நகரில் தரமான A/L விஞ்ஞானக் கல்விக்கு என்றும் New Master Institute B.M.C. Lane, Jaffna.


# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-


88 ஆம் பிரிவு A/L வகுப்புக்கள் ஆரம்பம்: 02-08-1986 சனி காலை 9.30 மணி

PHYSICS 9.30 - 10.30
CHEMISTRY 10.30 - 11.30
ZOOLOGY 11.30 - 12.30
BOTANY 12.30 - 1.30
PURE & APP. MATHS 11.30 - 1.30

விபரங்கட்கு:- New Master Institute B.M.C. Lane, Jaffna



மலர்- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 10 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 துல்கஃதா பிறை 18 (26-07-1986) SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 27


# போராளிகள் - அரசு பேச்சு: மொரிஷியஸில்

## அமைப்புகள் சார்பில் ஆராய வெளிநாட்டு சட்ட நிபுணர்குழு

புதுடில்லி, ஜூலை 25

தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் நடக்கும் வாய்ப்பு அதிகரித்து உள்ளது.

இரு சாராரையும், பெரும்பாலும் மொறிஷியஸில் சந்திக்க வைப்பதற்கு இந்தியா நடவடிக்கைகளும், ஏற்பாடுகளும் செய்து வருகிறது.

கொழும்பில் நடந்து முடிந்த அரசு—கூட்டணி பேச்சுக்களின் பெறுபேறுகள் இப்போது கூட்டணியினரால் போராளிகளின் அமைப்புக்களிடம் பரிசீலனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### சட்ட நிபுணர்

இந்தியரல்லாத வெளிநாட்டு அரசியல் சட்ட நிபுணர்கள் குழு ஒன்று இப் பெறுபேறுகளை நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றது.

ஐந்து போராளி அமைப்புகளின் அழைப்பின்பேரில் இந்த வெளிநாட்டு அரசியல் சட்ட நிபுணர்கள் குழு புதுடில்லி வந்துள்ளது.

போராளித் தலைவர்களும் இலங்கை அரசுத் தலைவர்களும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தும் கட்டம் நெருங்கியுள்ளதாக புதுடில்லி அரசு வட்டாரங்கள் கருதுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரு சாராரையும் சந்திக்க வைக்கச் செய்யும் நடவடிக்கையில் இந்திய அரசு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

பெரும்பாலும் மொறிஷியஸ் நாட்டில் இப்பேச்சுக்கள் நடத்தப்படும் என்று நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது. (அ-க-எ)

### மன்னாரில்

மன்னாரிலும் நேற்று கடையடைப்பும் ஹர்த்தாலும் நடத்தப்பட்டன. போக்குவரத்துச் சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. கடமைக்கு சமுகமளிப்பது குறைந்து காணப்பட்டது.

எனினும் படையினர் ரோந்து அதிகரிக்கப்பட்டிருந்தது.

ஆங்காங்கே குண்டுகள் வெடித்தன.

மன்னார் நகரில் இளைஞர் ஒருவர் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரின் சடலம் பின்னர் மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ)

### ரயில் சேவை மீண்டும் வவுனியாவரை

கொழும்பு, ஜூலை 26

வடக்கிற்கான ரயில் சேவை இன்று முதல் மீண்டும் வவுனியா வரை நடைபெறும்.

வவுனியா ரயில் நிலையத்தில் ஐந்து ரூபா அதிகமான பெறுமதியுடைய டிக்கட்டுகளைப் பெறுவதற்கு காசுக்கட்டளைகளை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து மருதானைக்குச் செல்வதற்கு மூன்றாம் வகுப்பு டிக்கட்டுக்கு 38 ரூபா 20 சதமும் —

இரண்டாம் வகுப்பு டிக்கட் பெறுவதற்கு 103 ரூபா 90 சதமும் பெறுமதியுடைய காசுக்கட்டளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

காசுக்கட்டளைகள் கொழும்பு பெரிய தபாலகத்தோரில் மாற்றத்தக்கதாக 'பிரதம கணக்காளர், ரயில்வே திணைக்களம்' என்ற பெயருக்கு எடுக்கப்பட வேண்டும். (உ)

# குடாநாடு முழுவதும் நேற்று அடங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 26

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகளை நினைவு கூர்ந்து நேற்று வடபகுதி முழுவதும் கறுப்புத் தினமாகத் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடையடைப்பு, ஹர்த்தால் காரணமாக குடாநாடு முழுவதும் நேற்று முற்றாக அடங்கிப்போனது. சிறு சந்தடிதானும் இல்லாது பூரண அமைதி நிலவியது.

நகரங்களும் வீதிகளும் வெறிச்சோடிக் காணப்பட்டன. நடமாட்டங்கள் இருக்கவில்லை. இ.போ.ச. பஸ்களோ, தனியார் வாகனங்களோ எதுவும் நேற்றுச் சேவையில் ஈடுபடவில்லை. நகர வீதிகளில் ஒரு சில சைக்கிள்களையே காண முடிந்தது.

கடைகள் அனைத்தும் முற்று முழுதாக இழுத்து மூடப்பட்டிருந்தன.

பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை.

யாழ் செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் நேற்று செயலிழந்திருந்தன.

ஊழியர்கள் வேலைக்கு


(8 ஆம் பக்கம் பார்க்க)


# கிழக்கிலும் முழு ஹர்த்தால்

மட்டக்களப்பு ஜூலை 26

மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வியாழன் இரவு இனந் தெரியாதவர்கள் மட்டக்களப்பு ரயில் நிலையக் கட்டுப்பாட்டு அறைக்குள் புகுந்து சிக்னல் திறப்புக்களை எடுத்துச் சென்றபடியால் நேற்று ரயில் சேவை நடைபெறவில்லை.

மட்டக்களப்புக் கச்சேரி, சில அரச அலுவலகங்கள் ஆகியவற்றின் திறப்புக்கள் முதல் நாளே பறிமுதல் செய்யப்பட்டதால் ஊழியர்கள் பணிபுரிய முடியாது போய்விட்டது. ஆயுதப் படையினர் வந்து பூட்டுக்களை உடைத்து அலுவலகங்களைத் திறந்து விட்டதைத் தொடர்ந்து வேலை செய்தனர்.

பின்னர் அலுவலகங்களின் முன் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அதைத் தொடர்ந்து வேலை செய்த ஊழியர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறினர்.

இ.போ.ச. வங்கிகள்


(8 ஆம் பக்கம் பார்க்க)


## சுவரொட்டி ஒட்டிய முஸ்லிம் இளைஞர் பலி!

திருகோணமலை, ஜூலை 26

ஹர்த்தால் அனுஷ்டிக்கக் கோரும் சுவரொட்டியை ஒட்டிக் கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் மூதூர் நகரில் வியாழன் இரவு 7 மணியளவில் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்த இளைஞரின் பெயர் அப்துல் முஹமது கரீம், வயது 22. மூதூர் வாசி.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் சடலத்தை நீதிவானுக்கு அறிவித்த சிப்பாய்கள் சடலத்தை உடனடியாக எரித்து விட்டனர்.

இறந்த இளைஞர் ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. (உ-எ-150)

## 5 லொறிகளில் வந்த 50 பேரின் கைவரிசை

கல்முனை, ஜூலை 26

ஐந்து லொறிகளில் வந்த இனந்தெரியாத நபர்கள் கல்முனையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனவுத் திணைக்கள ஸ்டோரைக் கொள்ளை இட்டனர்.

கடந்த வியாழக்கிழமை (நேற்று முன்தினம்) இரவு பத்து மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

ஐந்து லொறிகளில் இரண்டு, பின்னர் அநாதரவான நிலையில் வீதியோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் இக் கொள்ளையை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

கல்முனைப் பொலிஸாரிடம் இது சம்பந்தமாக முறையிடப்பட்டுள்ளது. (உ-எ-84)

# 'புளொட்'டிலிருந்து உமா நீக்கப்பட்டார்?

கொழும்பு, ஜூலை 26

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திலிருந்து (புளொட்) அதன் செயலதிபர் உமாமகேஸ்வரன் வெளியேற்றப்பட்டார்.

வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சி ஒன்று சென்னையிலிருந்து இந்தச் செய்தியை விடுத்தது.

புளொட்டின் மத்திய குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையோர் கூடி இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி பெரும்பான்மை உறுப்பினர்களால் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அறிக்கை ஒன்றையும் அச்செய்திஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது.

* நூற்றுக்கணக்கான புளொட் உறுப்பினர்களைக் கொலை செய்தமை-
* இயக்கப் பணத்தை மோசடி செய்தமை—
* தவறான இராணுவ நடவடிக்கை முறையில் இயக்கத்தை வழி நடத்திச் சென்றமை.

ஆகிய குற்றச்சாட்டுக்கள் உமாமகேஸ்வரனுக்கு எதிராக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தன. (உ)

## மேலும் சிப்பாய்கள் வடக்கிற்கு வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 26

நேற்று மாலை மூன்று நவீன கப்பல்கள் காரைநகர்- காங்கேசன்துறை கடல் பகுதியை வந்தடைந்தன.

இந்தக் கப்பல்களில் 500க்கு மேற்பட்ட சிப்பாய்கள் வந்தனர்; பெருமளவு நவீன ரக ஆயுதங்களும் வந்தன.

இக்கப்பல்கள் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் இரவு புறப்பட்டன.

கப்பல்கள் வந்து சேர்ந்தபோது ஹெலிக்கொப்டர்களும் விமானங்களும் பாதுகாப்பு வழங்கின.

தியத்தலாவ பயிற்சி முகாமில் இருந்து வெளியேறியவர்களே கப்பலில் வந்த சிப்பாய்கள் என்று தெரிகிறது. (உ-எ-6)

### படகுகள் சேதம்

பருத்தித்துறை, ஜூலை 26

பருத்தித்துறைப் பகுதியில் கடற்கரையோரத்தில் நங்கூரமிட்டிருந்த மீன்பிடிப் படகுகளை நோக்கி நேற்று நண்பகல் ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் பல படகுகள் பலத்த சேதமடைந்தன. (உ)

### அரசமைப்புக்கு 10 ஆவது திருத்தம்

கொழும்பு, ஜூலை 26

சாதாரண பெரும்பான்மையுடன் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வசதியைச் செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் பத்தாவது திருத்தத்தை நாடாளுமன்றம் நேற்று 3 இல் 2 பங்கு பெரும்பான்மையால் ஏற்றுக் கொண்டது.

திருத்தத்துக்கு ஆதரவாக 125 உறுப்பினர்கள் வாக்களித்தனர். அவான எம். பி. திரு. டியூ குணசேகரா எதிர்த்து வாக்களித்தார். 3 சுதந்திரக் கட்சி எம். பிக்கள், மக்கள் ஐக்கிய முன்னணி எம்.பி. ஒருவர் உட்பட நால்வர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (உ-எ)

### சுபநேரம்

26—07—1986

சனிக்கிழமை

சுபநேரம்:
03-02 முதல் 04-32 வரை
ராகுகாலம்:
09-02 முதல் 10-32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கருத்துக் கலசம்

மயூரா

### போதை வேண்டாம்

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே மதுவுக்கு அடிமையாகப் பழகிவிட்டான். மது மதியைக் கெடுக்கும் உடலைக் கெடுக்கும் குடியைக் கெடுக்கும் நாட்டைக் கெடுக்கும். இவை எல்லாம் அவனுக்குத் தெரியும்.

மதுவை இழிவாக மனிதனுக்குக் கூறின அறிஞர்கள் கூறினார்கள். ஆனால் மதுப் பழக்கம் மனித சமுதாயத்தை விட்டு அகலவில்லை.

இன்றைய சமுதாயம் மதுவில் மூழ்கிய சமுதாயமாக மாறி விட்டது. குடிப் பழக்கம் இல்லாதவர்களை விரல் விட்டு எண்ணும் அளவுக்கு மது பாவனை பெருகிவிட்டது.

நாலு நண்பர்கள் சேரும்போது குடித்தால் தான் "குஷி" என்று எண்ணும் அளவுக்குச் சமுதாயம் கெட்டுவிட்டது.

மது அருந்துவது ஒரு நாகரிகம் என்று கருதுமளவுக்கு இன்றைய சமுதாயம் மது அரக்கனின் வலையில் சிக்கித் தவிக்கிறது.

சாதாரண மதுவை விட இப்போது கொடிய—நவீன மது வகைகள் எல்லாம் வந்திருக்கின்றன. போதை வஸ்துக்கள் என் அவற்றுக்குப் பெயர்.

ஹிரோயின், ஹசிஸ் போன்ற கொடிய போதை வஸ்துக்களைப் பாவிப்போர் எண்ணிக்கையும் எம்மவர் மத்தியிலும் அதிகரித்து வருகிறது. இது இப்போது புதினமும் அல்ல.

சாதாரண கள்ளும் சாராயமும் மதியை மயக்கி, போதையை ஏற்றி மனிதனை கெட்ட வழிக்கு இட்டுச் செல்லும். ஆனால் ஹிரோயின் போன்ற போதைப் பொருட்கள் மனிதனை மிருகமாக மாற்றிவிடும்.

அவற்றின் போதை, வன்செயல்களைத் தூண்டுவதில் அதிக சக்தி படைத்தவையாக இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

புதிய ரகப் போதைப் பொருள்கள் இப்போது தாராளமாகக் கிடைப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாடசாலைகளுக்கு அருகேயும், முடுக்குகளிலும் இவை இரகசியமாக விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இந்த நிலை மிகவும் ஆபத்தானதாகும். எங்கள் சமூகத்தை வெறியர் கூட்டமாக்கிவிடும். காட்டுமிராண்டிகள் ஆக்கவும் வழி செய்யும்.

இந்த ஆபத்தை முளையில் கிள்ளி எறிவது அவசியம். மாணவர்களை இந்த ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதற்கு பாடசாலைகளில் போதை வஸ்து தடுப்புச் சங்கங்கள் நிறுவப்பட வேண்டும். கிராமமட்டங்களிலும் போதை வஸ்து தடுப்புச் சங்கங்கள் நிறுவப்படுதல்


8ஆம் பக்கம் பார்க்க)


# தமிழர் தாயகம்: ஜே. ஆர். இணக்கம்?

## 'இந்து'வில் ஜி. கே. ரெட்டி

புதுடில்லி ஜூலை 25

தமிழ தாயகம் ஒன்று உருவாவதற்கு திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இணங்குவார் போலத் தெரிகிறது. அந்த எண்ணத்தை நிராகரிக்கும் நிலையில் அவர் இல்லை.

மிக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து புதுடில்லி அரசுக்கு மேற்கண்ட தகவல்கள் கிடைத்துள்ளன.

பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி, கொழும்பில் நடைபெற்ற அரசு—கூட்டணிப் பேச்சுக்கள் குறித்து 'இந்து' நாளிதழில் எழுதிய கட்டுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

திருமலை மாவட்டத்தில் உள்ள கேந்திர ஸ்தானமான துறைமுக நிர்வாகத்தை மத்திய அரசின் பொறுப்பில் வைத்துக் கொண்டு வட மாகாணத்துடன், கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகளையும் சேர்த்து தமிழர் தாயகம் ஒன்று உருவாவதை ஏற்றுக் கொள்ளும் சார்புடையவராக திரு. ஜெயவர்த்தன இருக்கிறார்.

இலங்கையில் நிர்வாக வசதிக்காகத்தான் மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யாமல், சர்வசன வாக்கெடுப்பு வைக்காமல் மாகாண எல்லைகளை மாற்றியமைத்து தமிழ் மொழிப் பிராந்தியத்தை உருவாக்கலாம்.

ஐக்கிய இலங்கைக்குள் உருவாகும் இத்தமிழர் தாயகத்துக்கு உரிய பெயர் ஒன்று சூட்டப்படலாம்.

—இப்படி திரு ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கின்றார். (உ-எ-2)

## தனது கடும் போக்கை ஜே. ஆர். கைவிடுகிறார்

### பிரதமர் ராஜீவ் சொன்னது

புதுடில்லி, ஜூலை 25

திரு ஜெயவர்த்தன இதுவரை காலமும் கடைப்பிடித்து வந்த கடும் போக்கை கைவிட்டு வருவது போல் தெரிகிறது.

இதனால் இனப்பிரச்சினைக்கு விரைந்த தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் ஒளிக்கீற்று ஒன்று புலப்படுகின்றது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்ததாக அண்ணா தி மு க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. கே குழந்தைவேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

திரு. குழந்தைவேலு தலைமையில் அண்ணா தி மு க எம்பிக்கள் பிரதமரைச் சந்தித்து இலங்கைத் தமிழர் தொடர்ந்தும் படுகொலை செய்யப்படுவதாக முறையிட்டனர்.

அப்போதே திரு. ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு சொன்னதாக திரு குழந்தைவேலு தெரிவித்தார். (உ-எ-2)

## தொண்டாவுக்கு அது ஆச்சரியம்!

சென்னை ஜூலை 25

வடக்கு கிழக்கு இணைப்புக்குச் சாதகமாக ஒருமித்த கருத்து உருவாகியுள்ளதாக வந்த தகவல் எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. அது உண்மை என்றால் சந்தோஷமே. ஆனால் அதை அமுல் நடத்துவது தானே முக்கியம்.

இப்படி அமைச்சர் தொண்டமான் மதுரையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இணைப்புக்குத் தீவிரமான எதிர்ப்பை சிங்கள மக்கள் காட்டி வருகின்றனர்.

வடக்கு — கிழக்கு மாகாணங்கள் பரம்பரையாகத் தமிழர் தாயகம் என்ற விடயத்தில் உடன்பாடு ஏற்படலாம்; ஆனால் அது அமுல் நடத்தப்படவேண்டும் ஏற்றுக்கொண்டபடி அமுல் நடத்துவதில்தான் எல்லாம் தங்கியுள்ளது. பொறுத்திருந்து பார்ப்போம்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (உ-எ-2)

## இளைஞர்கள் உயிர்த் தியாகம்

# கிழக்கை நாம் கைவிடமாட்டோம்

### அமிர் உறுதியாக கூறினாராம்

கொழும்பு ஜூலை 26

கிழக்கையும் இணைத்து தமிழ் ஈழம் அமைக்க வேண்டும் என்று கோரி இளைஞர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள்; செய்து வருகிறார்கள். கிழக்கை நாம் கைவிட முடியாது.

இப்படிக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் தன்னிடம் திட்டவட்டமாகத் தெரிவித்ததாக இலங்கை மக்கள் கட்சி செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க கொழும்பில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பாக மாற்றுத் திட்டம் எதையும் அரசு சமர்ப்பிக்கவில்லை என்றும்—

நிர்வாக ரீதியாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்து செயல்படும் அமைப்பு பற்றி அரசு பரிசீலனை செய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்ததாக அவர் மேலும் சொன்னார். (உ-எ-2)

புதுமையும் எழிலும் பெரலியும் பல்சுவை வார இதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா இன மக்களையும் திருப்திப்படுத்தக் கூடியது சமஷ்டி அரசமைப்புத்தான்

1928 இல் அரசமைப்புச் சட்டம் மீளாய்வு செய்யப்பட உள்ளது.

திருப்திகரமான அளவில் சுயாட்சி நிறைந்த அரசாங்கம் எதிர்பார்க்கப்படுகிறது

ஆகவே இந்த அரசியல் பிரச்சினை குறித்து தெளிவாக முழு அளவில் சிந்திக்க வேண்டியுள்ளது.

இப்போது பிழையான நடவடிக்கை எடுக்கப்பட்டால், பிழையான யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டால் எதிர்காலத்தில் அவற்றின் தாக்கத்தில் இருந்து மீளுவது மிகவும் கஷ்டமானதாக இருக்கும்

எல்லாரும் விரும்புவது சுயாட்சி நிறைந்த அரசாங்கம் ஒன்றையே அவர்களின் இலட்சியமும் அதுவே.

இலங்கையில் இரண்டு வித அரசாங்கங்கள் இருந்தன

**நிந்தகம, விதானை முறை**

ஒன்று 'நிந்தகம' முறை. அது காணி குத்தகை சம்பந்தமானது. இரண்டாவது, மாகாண நிர்வாகத்தில் கிராம விதானை முறை

நிந்தகம முறை, பிரபுத்துவரீதியான அரசாங்கம். காணிக் குத்தகை செலுத்தப்பட்டால் போதும். வேறு ஒன்றும் கவனிக்கப்பட மாட்டாது. குத்தகைப் பணமாகவே நேரடியாகச் செலுத்தப்பட்டது.

இரண்டாவது விதானை முறை, கிராம மட்டத்தில் இடம் பெற்றது. அரசர் கிளைபதி (அரச அதிபர்) களை, ரட்ட மஹாத் மாயாக்களை (உள்ளூராட்சி அதிகாரிகளை) வைத்து ஆட்சி நடத்தினார்.

மாகாணங்கள் முதலில் பிரிக்கப்பட்டன பின்னர் உபபிரிவுகளாக்கப்பட்டன. 'கன்சபாவ' (கிராமச் சங்கங்கள்) மட்டம் வரை இப்பிரிவுகள் இருந்தன.

கிராமத்தில் உள்ள குடும்பங்களின் தலைவர்கள் எல்லாம் கிராமச்சங்கத்தில் உறுப்பினர்கள். சொத்துக்கள் உள்ளவரா என்பது பற்றி கவனிக்கப்படவில்லை

கிராமச் சங்கத் தீர்ப்புக்களை எதிர்த்து அரசருக்கு முறையிடலாம். ஆனால் கிராமச்சங்கத் தீர்ப்புக்கள் பெரும்பாலும் தள்ளப்படுவது இல்லை.

இதன் கருத்து, முழு நாடும், அரசருக்குத் தெரிவிக்கும் பொது விசுவாசப் பிரமாணத்தின் கீழ் கட்டுப்பட்டுள்ள ஒரு சமஷ்டியே

பிரிட்டிஷார் ஆட்சியில் அதிகாரங்களை ஒரு இடத்தில் குவித்து வைக்கக் கூடியதான அரசாங்கம் அறிமுகப்படுத்தப் பட்டது.

சுதந்திரமான அமைப்பு என்ற ரீதியில் அதிகாரங்களை ஒரு இடத்தில் குவிக்கும் அரசாங்கம் ஆக அது இருந்து வருகின்றது

**அதிகார வர்க்க ஆட்சி**

இன்று கூட அது அதிகாரவர்க்க ஆட்சியாக இருக்கிறதே தவிர வேறு மாதிரி இல்லை.

பெரிய அளவில் சீர்திருத்தம் வேண்டி நடத்தப்பட்ட அரசியல் கிளர்ச்சி பற்றிக் கூறப்பட்டது. 1915 இல் குழப்பம் ஏற்படும் வரை அந்த அரசியல் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படவில்லை

படித்த இலங்கையருக்கான உறுப்பினர் சேர் பி இராமநாதனின் பெரும்பங்கு பற்றி இங்கு கூறப்பட்டது

தேசிய காங்கிரஸை சேர் பி. அருணுசலம் ஆரம்பித்தார். சீர்திருத்தம் கோரிய கிளர்ச்சி இயக்கத்தின் தந்தையாகவே அவர் இருந்தார்.

பிரிட்டிஷ் பேரரசின் கீழ் சுயாட்சி நிறைந்த அரசாங்கம் ஒன்றைப் பெறுவதே காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட சமயம் பெரும்பாலாரின் நோக்காக இருந்தது

சட்டசபையில் மேலும் சில ஆசனங்களைப் பெற்றுக் கொண்டதைத்தவிர வேறு ஒன்றும் இடம் பெறவில்லை.

**பிழையான அடிப்படைகள்**

சீர்திருத்தம் வேண்டிப் போராடியவர்கள் தம் முழுச் சக்தியையும் இரண்டு வழிகளில் பிழையான அடிப்படையில் செலவிட்டனர்

திட்டம் பற்றிய தகுதி பற்றிக் கேள்வி எழுப்பப் படவில்லை. இரண்டாவது இங்கிலாந்தில் உள்ள அரசாங்க அமைப்பைப் பிரதி பண்ணுவதே அவர்கள் நோக்காக இருந்தது.

அதன் பலனுகத் தற்போது உள்ள சட்டசபை ஆகக்கூடிய கலப்பின சபையாக இருக்கிறது.

மக்களின் சட்டசபை என்று தான் பெயரே கிடைக்கவில்லை

நிதிக்கட்டுப்பாடு குறித்து சட்ட சபைக்கு ஓரளவு அதிகாரம் இருந்தது. அது போதுமானதாக இருக்கவில்லை

நிறைவேற்றுக் கவுன்ஸில் சட்ட சபையில் இருந்து பிரிந்து செயல்படுகின்றது. இதனுல் சட்டசபை, பாடசாலை மாணவர் விவாதம் செய்யும் சங்கம் மாதிரிக் காணப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகக் கிடைத்த பலன் இதுதான்.

இதற்கு நாம் கொடுத்த விலை தமிழர் சிங்களவர் பிளவும் கண்டிச் சிங்களவர் — கீழ் நாட்டுச் சிங்களவர் பிளவுமே.

**சந்தேகப் பார்வை**

சிறுபான்மையினர் ஆளை ஆள் சந்தேகத்துடன் பார்க்கின்றனர். இந்த வேறுபாடுகள் அடிப்படையானவை அல்ல என்று நினைப்பது பிழையானது.

தான்.

அரசாங்கத்தை எமது கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பேச்சு எழுந்தவுடன் மனதில் படிந்திருந்த வேறுபாடுகளும் வெளித் தோன்றத் தொடங்கின.

பழைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் ஒன்று தெரியும். மூன்று சமூகங்களான தமிழர், கண்டிச் சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர் இலங்கையில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்தும், இணைந்து வாழும் விருப்பத்தைக் காட்டவில்லை என்பதே அது

**தனித்துவத்தைப் பாதுகாத்தனர்**

தங்கள் மொழி, சமயம், பழக்க வழக்கம் ஆகியவற்றை அவர்கள் பாதுகாத்தே வந்தனர்

படிப்படியாக இந்த வேறுபாடுகள் மறைந்து விடும் என்ற நம்பிக்கையை வைத்திருப்பவன் சிந்திக்கத் தெரியாதவனுகத்தான் இருக்க வேண்டும்.

சீர்திருத்தத் துக்குள்

> இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைகளுக்கு சமஷ்டி அரசமைப்பு முறையே சிறந்தது. அதுவும் சுவிட்சர்லாந்து முறை மிகச் சிறந்தது
>
> 60 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கண்டவாறு சொன்னார் திரு எஸ் டபிள்யு ஆர் டி. பண்டாரநாயக்கா
>
> மாணவர் காங்கிரஸ் ஆதரவில் நடந்த கூட்டம் ஒன்றில் பாரிஸ்டராக லண்டனில் இருந்து திரும்பிய திரு பண்டாரநாயக்கா.
>
> 'எமது அரசியல் பிரச்சினைகளுக்கு சமஷ்டியே ஒரே தீர்வு'— என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை இங்கு பிரசுரமாகின்றது
>
> இக்கூட்டத்திற்கு டாக்டர் ஐசாக் தம்பையா தலைமை வகித்தார்
>
> சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையின் 17-7-1926 ஆம் திகதிய இதழில் இது பிரசுரமானது
>
> அப்பத்திரிகையின் யாழ்ப்பாண செய்தியாளர் இச்செய்தியை அனுப்பி இருந்தார்

## தமிழரும் சிங்களவரும் இணைந்து வாழும் விருப்பத்தைக் காட்டவில்லை

ஒழிய, உண்மையில் அறவே பயனற்ற அமைப்பு அது.

பல்வேறு இணக்கங்கள் கூறப்பட்டன. கூறியவர்கள் எல்லாம் அரசு உறுப்பினர்கள் அவர்கள் வாக்காளர்களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்கள் அல்லர்.

பிரதேசக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இனரீதியான கொள்கையும் எதிர்ப்பு இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எல்லாம் சொன்ன பின்னர் பார்த்தால் சட்டசபைக்கு உண்மையான அதிகாரங்கள்

இந்த வேறுபாடுகள் தனிப்பட்ட அபிலாஷைகளைக் கொண்ட சிலரால் உருவாக்கப்பட்டவை; அவர்கள் இறந்தவுடன் வேறுபாடுகளும் மறைந்து விடும் — இப்படியும் சிலர் நினைத்தனர்

சில நூறு ஆண்டுகளுக்கு அப்படியான வேறுபாடுகள் காணப்படவில்லை. காரணம் பிரிட்டிஷ்காரன் தமிழன் கண்டிச் சிங்களவன், கீழ் நாட்டுச் சிங்களவன் ஆகியவர்களின் தலைகளில் அமர்ந்து இருந்

ளாகும் அரசாங்கத்தின் கீழ் சட்டசபை பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் தெரிவுசெய்யும். மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் அரசாங்கம் நாடு தழுவியதாகவே அமைகின்றது

இலங்கையில் நிலவுவது போன்ற முரண்பாட்டுச் சூழ்நிலைகளின் கீழ் உலகில் எந்த நாட்டிலும் அரசாங்கம் அமையவில்லை என்பது எனக்குத் தெரிகின்றது.

சமூக வேறுபாடுகள் பெருமளவில் நிறைந்த நாடுகளில் மத்தியில் அதிகாரங்களைக் குவித்

(7ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டோரிய விடுதலைக் குரல் பிஷப் டெஸ்மன்ட் டுட்டு

## நோபல் பரிசு பெற்ற கறுப்பின மேதை தென்னுபிரிக்க ஜனாதிபதியாகலாம்

**எஸ். ஜெகதீசன்**

-தென் ஆபிரிக்காவின் கேப் டவுண் பகுதி.

அதன் நன்நம்பிக்கை முனைக்குச் சார்ந்ததாகப் பல சின்னஞ் சிறிய குடிசைகள்

மாலையில் மறையும் சிவப்பு நிறமாக சூரியன் வட்டவடிவில் ஒருபுறம்.

அதேவேளை உதயமாகும் இனிய மஞ்சள் நிறத்தில் வட்ட வடிவான பூரண சந்திரன் மறுபுறம்.

இந்த ரம்மியமான காட்சியை ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் மனத்தால் ரஸித்து மனம் முழுவதும் லயித்து வரும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்களில் ஒரு ஏழைத் தலைமை ஆசிரியரின் குடும்பமும் அடங்கியது.

அக்குடும்பத்தின் மனத்தை மேலும் மகிழ்ச்சியில் ஆழ்த்த 1931 ஆம் ஆண்டு மகன் ஒருவன் பிறந்தான்.

பிறந்த உடனேயே நிலவின் குளிர்ச்சியைக் காட்டிய அவன், எதிர்காலத்தில் சூரியனின் தகிக்கும் வெப்பத்தையும் ஒரு சிலருக்காவது காட்டுவான் என ஒருவரும் அப்பொழுது எதிர்பார்க்கவில்லை.

ஆபிரிக்கா தேசத்தில் கறுப்பின மக்களிடையே ஒரு பாரம்பரிய வழக்கம். ஆண்குழந்தை பிறந்தால், பிள்ளையின் தகப்பன் அக்குழந்தையைத் தனது இருகைகளாலும் தலைக்கு மேலே உயரத் தூக்கிப் பிடிப்பான். வெய்யிலின் வெப்பத்தால் துவண்டு வீரிட்டு அழும் அக்குழந்தை எதிர்காலத்தில் அந்த வெய்யிலால் எவ்விதமான பாதிப்பையும் அடைய மாட்டாது என்பது காலகாலமாக அவர்களிடமிருந்து வரும் ஆழ்ந்த நம்பிக்கை.

அதன் பின்னர்தான் பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டப்படும்.

ஏழைத் தலைமை வாத்தியாரும் இவற்றிற்கு விதிவிலக்கல்ல.

சூரிய ஒளியில் வாடிய பிள்ளைக்கு டெஸ்ட் மண்ட் டுட்டு எனப் பெயர் சூட்டினுர்கள்.

அதே பிள்ளைதான் வாடிவதங்கும் கறுப்பின மக்களுக்கு எதிர்காலத்தில் குரல் கொடுக்கப் போகின்றது என்பதை அப்பொழுது எவரும் உணர்ந்திருக்க முடியாது.

ஏழை மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற சீரிய கொள்கையை மிகவும் இளம் வயதிலேயே டுட்டு தமது தாயாரிடமிருந்து நன்கு கற்றுக் கொண்டார்.

மகாத்மாகாந்திஜியின் சாத்விகப் போராட்டங்களும், கறுப்பு இன மக்கள் படும் அவஸ்தைகளை துல்லியமாக டுட்டுவின் இளம் மனதில் ஆழமாகப் பதிந்தது

மெதஸ்டிஸ்த தலைமை ஆசிரியரான இவரது தந்தையின் வருமானம் இவரது மேற்படிப்புக்குப் போதுமானதாக அமையவில்லை

நெஞ்சம் முழுவதும் சாத்வீக - அதேசமயம்— தீவிரவாத நினைவுகள் நிரம்ப இவர் அங்கிலிக்கன் மிஷனரியில் ஓர் ஆசிரியரானுர்.

அன்புடனும் பண்புடனும் பிரச்சினைகளை அணுகினுர் நீதி கிடைக்கும் வரை நேர்மையாக உறுதியாக இறுதிவரை போராடினுர்.

இதனுல் கறுப்பு இன மக்கள் தமதுபார்வையை இவர் மீது செலுத்திக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தனர். தமது வாழ்வின் விமோசனத்துக்கு டெஸ்ட் மண்ட் டுட்டு நல்லதொரு வழிகாட்டியாவர் என உறுதியுடன் நம்பினர்.

1975 ஆம் ஆண்டு ஓர் அங்கிலிக்கன் டீனுகப் பதவி ஏற்றுர். இப்பதவியை அலங்கரித்த முதலாவது கறுப்பு இனத்தவர் என்ற பெருமையும் இவரை நாடி வந்தது

1978 ஆம் ஆண்டு தென்ஆபிரிக்க கிறீஸ்தவ தேவாலயங்களின் கூட்டமைப்புக்குழுவின் தலைமைச் செயலாளர் பதவி இவரைதேடி அடைந்தது

ஆத்மீகத் தொண்டும் மக்களுக்குத் தேவை. அதே நேரத்தில் அஞ்சாத நெஞ்சினர்களாகப் பரிணமிப்பதும் முக்கியமானது என்பதை பிஷப் டெஸ்ட் மன்ட் டுட்டு தமது மக்களுக்கு வலியுறுத்தி வந்தார்

இறைவனது படைப்பில் சகல மக்களும் சமத்துவம் எவ்விதமான பேதங்களும் அவர்களது வாழ்வை சீர்குலைத்து விட இடமளிக்கக் கூடாது - இடமளிக்கவும் முடியாது என இவரது வீர முழக்கங்களைக் கேட்ட வெள்ளையரசு நடுங்கியது.

இவருக்கு இன்னல்கள் பல திசைகளிலிருந்தும் வெள்ளையரசால் விளைவிக்கப்பட்டபொழுதும் இவர் மனம் தளரவில்லை- நிலை குலையவில்லை.

மனித உரிமை மீறல்களும் சாதி பேத இன மத ஏற்றத்தாழ்வுகளும் உலகின் எந்தப்பகுதியிலிருந்தாலும் தயங்காது குரல் கொடுப்பவர் பிஷப் டுட்டு.

இவரது அரிய சீரிய பணிகளைக் கௌரவிக்கும் முகமாக 1984 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

பிரிட்டோரியா அரசு மக்களால் துவம்சம் செய்யப்பட்டுப் பெரும்பான்மையான மக்களின் கைக்கு ஆட்சி வரும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை. பிஷப் டுட்டுவின் பெயரும் அதிமுக்கிய இடத்தில் அங்கு நிலை கொள்ளும்.

எதிர்காலத்தில், -சுதந்திர தென்னுபிரிக்காவின் அப்பழுக்கற்ற ஜனாதிபதியாகவும் அவர் திகழ்வார் என்று நம்பலாம்.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 24 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41. 06 |
| அமெ. டாலர் | 27. 88 |
| இந்திய ரூபா | 2. 30 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 95 |
| கனடா டாலர் | 20. 02 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 01 |
| பிராங் (சுவிஸ்) | 15. 76 |
| [illegible] | [illegible] |

## நீத்தார் பட்டியல்

### வே. நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, அம்பாறை. R.V D B.)

இவர் சண்டிலிப்பாய் காலஞ்சென்ற திரு. வேலுப்பிள்ளை, திருமதி நாகம்மாவின் அன்பு மகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் சற்குணநாதன் (Sugar Cane Farm-அம்பாறை), வேலுப்பிள்ளை (France), விஜயகுமார் (U.K.), விக்னேஸ்வரன் (France), சந்திரகுமார் (U.K), அருந்ததி, ரஞ்சனி, சகுந்தலா, விஜயாகினி (India) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேஸ்வரி, சிவஞானமதி, நிர்மலாதேவி (M.Sc., U K.), இந்திராணி, புவிராஜ் (R G S.T.–Technical Supervisor, Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும். கன்யா, திருவேணி, யாழினி, கவிராஜ், வேல்சசன் ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி நாகரத்தினம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னுரின் இறுதிச் சடங்குகள் 27-7-86 (நாளை) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 00 மணிக்கு நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி நாகலிங்கம் (மனைவியும்) பிள்ளைகளும்,

சோதிப்பிடிசி,
சண்டிலிப்பாய்

## அரசாங்க அலுவலகங்களில்

**"சிகதி"**

### முத்திரையோ முத்திரை!

தபால் கந்தோர்களில் முத்திரைகள் இல்லை. தனியார் கடைகளிலெல்லாம் மேலதிக விலைக்கு முத்திரைகள் உண்டு. இதனைத் தபால் பகுதித் திணைக்களம் கருத்தில் கொண்டு ஓர் ஒழுங்கு முறையில் விநியோகத்தைச் செய்தால் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும். முத்திரைகளைப் பெறுவதில் திணைக்களத்தினருக்கு கஷ்டங்கள் இருக்கலாம் ஆனால் முன்கூட்டியே இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல்வேண்டும். போக்குவரத்து ஸ்தம்பித்தபின்னர் பிரயத்தனம் செய்வதில் பயனில்லை யாழ் வர்த்தகர்கள் பொருள்கள் கொள்வனவில் கையாளும் முறையை தபால் திணைக்களமும் பின்பற்றலாம். முத்திரை பழுதடையக் கூடிய பொருளா?

*

பல பொது ஸ்தாபனங்களை நிர்வகிப்பவர்கள் தங்களைக் கண்காணிக்கும் திணைக்கள அதிகாரிகளைத் தங்கள் வசப்படுத்தி தாங்கள் புரியும் திருகுதாளங்களை மறைக்க முற்படுவது இன்றைய வழமை. சில காலத்திற்கு முன்னர் ஒரு புகார் ஒன்றினை விசாரிக்கச் சென்ற அரசஅதிகாரிக்கு பொது ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் பொறுப்பாளர் வீட்டில் மதிய உணவு விருந்துபசாரம். புகாருடன் சம்பந்தப்பட்டவர் மதிய உணவை வழங்கியவராவர். அதற்கும் பிற்பாடு அவரது அறிக்கை அப்புகார்களில் எவ்வித உண்மையுமில்லை என்ற கருத்துப்பட இருந்ததாம். ஆகையால் திணைக்கள உயர் அதிகாரிகள் தங்களின்கீழ் கடமைபுரியும் பணிப்பாளர்கள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். வெறும் பாசாங்குக்காரர்கள் விசாரணை உத்தியோகத்தர்களாக மாறக் கூடாது.

*

சுன்னாகம் எரிந்த சந்தைக்கட்டடம் பூர்த்தி செய்யப்படும் என்ற செய்தி வெளிவந்துள்ளது. சுன்னாகத்தில் எரிந்த தனியார் கட்டடங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான விபரங்கள் சேகரிக்கப்பட்டன. ஆனால் இதுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை கடைகளையும் சந்தைக்கட்டடங்கள் திருத்தம் செய்யப்படும்பொழுது திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் சந்தையைச் சுற்றியுள்ள பகுதி பூரண பொலிவு பெறும். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களும் ஆறுதல் அடைவர்

*

கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் சென்ற வரவு செலவுத் திட்டத்தின்போது அறிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது அதற்கான அலுவல்கள் நடைபெற்று வருவதாக விவசாய இன்சூரன்ஸ் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார் உத்தேச திட்டத்தின் பிரகாரம் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1,00,000 கமக்காரர்கள் கொண்டு வரப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைக்கு வரும் பொழுது இங்கே கமக்காரர்கள் இருப்பார்களா? என்பதுதான் சந்தேகம்

*

அரச பணியாளர்களின் வருடாந்த சம்பள உயர்வுகளில் காலதாமதம் ஏற்படுவது நல்லதல்ல. பொதுவாக இதனால் பெரும்பாலும் பாதிக்கப்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆசிரியர்களிடம் படித்தவர்கள்தான் இச்செயற்பாட்டிற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் வருடாந்த மாற்றங்கள் இடம்பெற்றுவரும் யாழ் கல்வித் திணைக்களத்தில் இதற்கும் ஓர் ஒழுங்கு இல்லாமல் இருக்கிறதா என அறிய விரும்புகிறோம். *

## அமரர் சண்முகம்

### நினைவுக் கட்டுரைப்போட்டி (1986)

பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி முடிவுநாளை நீடிக்குமாறு பாடசாலை அதிபர்களும், மாணவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதனைக் கருத்திற் கொண்டு போட்டி முடிவு நாளை 6-8-86 ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.

போட்டி விதிகள் ஏற்கனவே உதயன், சஞ்சீவி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தன.

அமைப்பாளர்கள்

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?

நீங்களும் பட்டதாரியாகலாம்

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் (வெளிநிலை) பாடநெறிகளான

- ★ கலை முதற் தேர்வு G A Q.
- ★ விஞ்ஞான முதற் தேர்வு (புள்ளி விபரவியல்) G.S.Q
- ★ சட்ட முதற் தேர்வு (First-in-Laws)
- ★ வணிக முதற் தேர்வு (First-in-Commerce)

க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அல்லது பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 29-8-1986

உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் கவனத்திற்கு: ஸ்ரான்லி வீதியில் பட்டப்படிப்புகள் கல்லூரிக்கு கிளை நிறுவனங்கள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி சிவானந்தரை நாடிய எவர் தானும் வெறுமையுடன் திரும்பியதில்லை

தன்னை அறிந்தவன் தலைவன் ஆகின்றான். தன்னை ஆத்மா என்று உணர்ந்தவன் உலகமெல்லாம் ஆத்மாவாகவே காணுகின்றான். சுவாமி சிவானந்தர் பிறப்பால் தமிழராயினும் வாழ்வால் உலகத்தவராகவே வாழ்ந்தார் உலகுக்குப் பொதுவாக ஒளி தந்தார்.

சுவாமி சிவானந்தர் காட்டிய வழியை ஒவ்வொரு தேசத்தவரும் தத்தமது தேச வாழ்க்கைக்கு அமைந்ததாகவே ஏற்றுக் கொண்டனர் அதனாலே தான் அவர் மண்டலேஸ்வர ஜெகத்குரு ஆனார். அறியாமை இருளில் மூழ்கி கிடந்த கோடிக்கணக்கான ஆத்மாக்களுக்கு சுவாமி சிவானந்தர் கலங்கரை விளக்கமானார்.

குன்றிலிட்ட தீபம் பலருக்குப் பயன்படுவது எங்கிருந்தாலும் அறிந்து கொள்ள முடியும்; இதே போல சிவானந்தரின் ஹிமாலய வாழ்க்கை உலகமெல்லாம் ஒளி வீசிப் பரவியது. உலகில் உயர்ந்தது ஹிமாலயம். அதில் ஏற்றிய ஆத்ம ஒளி உலகமெல்லாம் பரவிப் பிரகாசித்தது ஹிமாலயத்தில் எழுந்த ஆத்ம சக்தியை உலகெங்கிலும் உள்ள தெய்வீக வாழ்க்கைச் சங்கங்கள் தேக்கி வைத்தன. அந்த நிலையங்களில் இருந்து தேவையானோருக்குத் தேவையான அளவு சக்தி கிடைத்துக் கொண்டிருக்கின்றது எல்லா சமயத்தவருக்கும் சமூகத்தவருக்கும் ஏற்ற வழிதான் தெய்வீக வாழ்க்கை. தெய்வீக வாழ்க்கை ஒன்றினாலேயே தான் உலக சமரசத்தைக் காண முடியும்.

இன்று உலக மக்களிடையே சமரச தாகம் ஒன்று எழுந்துள்ளது. வல்லரசுகள் எத்தனையோ வழிகளைக் கையாண்டன ஐக்கிய நாடுகளின் சபை இராப்பகலாக உழைத்து வருகின்றது வெற்றிதான் கிடைக்கவில்லை

ஆனால் தனிமனிதர் ஒருவரால் தொடக்கப் பெற்ற தெய்வீக வாழ்க்கை உலகமெல்லாம் வேரூன்றிக் கொப்பும் கிளையுமாகப் பரவியுள்ளது.

இதுவே சுவாமி சிவானந்தரின் வெற்றியாகும் சுவாமி சிவானந்தரின் டாடிக் கொண்டிருக்கின்றது. தன்னைப்பற்றி மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருந்த மனித சமுதாயத்தை அயலவனைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டினார் சுவாமி சிவானந்தர்

கொடு, கொடு கொடுத்துக் கொண்டேயிரு என்பது அவருடைய அழியாத உபதேசம் இந்த உபதேசத்துக்கு இலக்கிய புருஷராகத் தம்மையே மாற்றிக் கொண்டார். உடற்தேவை, உளத்தேவை, ஆத்மதேவை மூன்றையும் ஈடு செய்தார்.

அவரை நாடிச் சென்றவர் எவருமே வெறுங்கையுடன் திரும்பியதில்லை தத்தமது பக்குவ நிலைக்கேற்ப அவரிடமிருந்து ஏதோ பெற்றுச் சென்றனர்.

இதனால் சுவாமி சிவானந்தர் ஜகத்குரு ஆனார்

இன்றைய அமைதியற்ற உலகில், போர் வெறியும் இன வெறியும் தலைவிரித்தாடும் உலகில், சுவாமி சிவானந்தரின் சொல்லமுதைப் பருகி ஆத்மீக வெற்றிக் கொடி உலகமெல்லாம் பட்டொளி வீசிப் பரந்து கொண்டிருக்கின்றது உலகமெல்லாம் அவரை ஜகத்குரு என்று கொண் அவற்றை வாழ்வில் ஓதி உணர்ந்தால், நம்மிடையே சிவானந்தம் ஓங்கும், விவேகம் தழைக்கும், இன்ப அமைதி பெருகும்.

> தன்னைப்பற்றி மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருந்த மனித சமுதாயத்தை அயலவனைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டியவர் சுவாமி சிவானந்தர்
>
> குருதேவர் சிவானந்த மகரிஷி அவர்களின் நினைவு தினம் வரும் புதன்கிழமை 30 ஆம் திகதியாகும்
>
> நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் அவரது நினைவு தினம் விமரிசையாகக் கொண்டாடப்படும்
>
> அதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது

**சி. கனகரத்தினம்**
(தலைவர்: யாழ், திவ்ய ஜீவன சங்கம்)

"காயனை அகரமனாக்கி, கண்டனை அகண்டனாக்கி
பேயனைப் பிரமமாக்கி, பிறப்பிறப்பிலாமை
யாக்கி, தாயினும் இனியனாகி தகைத்தனை
அணைத்து ஆண்ட தூய சற்குருவே உன்னைத்
தொழுந்தோறும் களி துலங்குமே"

## குறை கூறி என்ன பயன்?

முன்னேற வேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஆசை இருக்கிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற்று முன்னேற வேண்டுமென்றால் பிறருடைய வெறுப்புக்கு ஆளாகாதிருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மை வெறுக்காதிருக்க ஒரு வழி நாம் அவர்களை குறைகூறாதிருப்பது.

ஆனால் குறை கூறாதவர் யாராவது இருக்கிறாரா என்றால் இல்லை என்றே சொல்லலாம்

தந்தை தனக்கு எதையும் செய்யவில்லை என்று மகன் குறை கூறுகிறான் தனயன் தன்னை மதிப்பதே இல்லை என்று தந்தை குறை கூறுகிறார்.

மாமியாரைக் குறை சொல்லாத மருமகளையும், மருமகளைக் குறை சொல்லாத மாமியாரையும் காணமுடியுமா?

என்னதான் உழைத்தாலும் தொழிலாளியைக் குறை கூறுகிற முதலாளியையும், எவ்வளவுதான் கொடுத்தாலும் முதலாளியைக் குறைகூறுகிற தொழிலாளியையும் எங்கும் காணலாம்.

சிலர் ஒருவருடைய குறைகளை அவரிடம் நேரடியாகவே சொல்லி விடுகிறார்கள் பலர் அடுத்தவரைப் பற்றி நம்மிடமும், நம்மைப்பற்றி அடுத்தவரிடமும் குறைப்பட்டுக் கொள்கிறார்கள்

தேநீர் குடிப்பது போலக் குறை கூறுவதும் நம்மிடையே ஒரு பழக்கமாகி விட்டது

குறை கூறுதல் விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும் அதனால்தான், "நீங்கள் மற்றவரைக் குறைகூறிக் கொண்டிருக்காதீர்கள்." என்று திருக்குர்ஆன் அறிவுறுத்துகிறது.

தொகுப்பு:
க. கனகராசா

தமிழர் பிரச்சினை: ஒப்பந்தங்களும் தீர்வு முயற்சிகளும்

# தமிழர் தாயகம் என்பதை நிராகரிப்பதே அரசின் திட்டம்

பகுதி III

மாகாணங்களுக்கிடையேயான நீர்ப்பாசனமும், காணி அபிவிருத்தி திட்டங்களும்—என்ற தலைப்பில் ஜனாதிபதி கொடுத்திருக்கும் திட்டமும் இவ்விடத்தில் கவனிக்கப்பட வேண்டியதாகவிருக்கிறது.

இத்தகைய திட்டங்கள் இலங்கை அரசிற்கே உரியன என தெளிவாக்கப்பட்டுள்ளது

இத்திட்டங்களில் விவசாய குடியிருப்பு காணிகளுக்கு ஆட்களை தெரிவு செய்வதற்கான கோட்பாடுகளையும் அடிப்படைகளையும் மாகாணசபைகளின் ஆலோசனைகளையும் பெற்று இலங்கை அரசே முடிவு செய்யும்

தேசிய காணி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு—அது இக்காணிகளின் உபயோகம் சம்பந்தமான கொள்கையை உருவாக்கும் பொறுப்புடையதாக விருக்கும்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களைச் செயற்படுத்தும் பொழுது மாகாணசபைகள் தேசிய காணி ஆணைக்குழு வகுக்கும் தேசிய கொள்கையை அனுசரிக்க வேண்டிய கடமைப்பாடுடையதாக இங்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளன

இன விகிதாசார அடிப்படையில் காணிகள் வழங்கப்படுவதற்கான திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முழு இலங்கையிலும் உள்ள இனவிகிதாசார அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகள் வழங்கப்படலாம். அப்படி வழங்கப்படின் வருங்காலத்தில் இப்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மையினராயுள்ள சிங்களவர் இம்மாகாணங்களிலே பெரும்பான்மையினராக மாறி விடுவர்.

அப்படி ஏற்படின் தமிழர் தாயகம் என்ற நிலையே நாளாவட்டத்தில் இல்லாது போய் விடும்.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றின் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் - யூ என் பி.யும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகம் என்று ஏற்றுக் கொண்டன அந்த நிலையிலிருந்து வழுவி தமிழர்களுக்கென பிறிதான

### செங்கோல்

தாயகம் என்று ஒன்று இல்லை என்பதை உறுதி செய்யவே ஜனாதிபதியின் திட்டங்கள் மிக்க கவனமாக தயாரிக்கப்பட்டுள்ளன என்பது நன்கு தெளிவாகிறது.

திருகோணமலை - மட்டக்களப்பு மாவட்டங்களில் 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டில் காணப்படும் ஜனத்தொகை அடிப்படையில் இன விகிதாசாரத்தைப் பேணுவது அரசின் கொள்கை எனவும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி திருகோணமலை மாவட்டத்தில் இன அடிப்படை வருமாறு:-

தமிழர் — 93, 510 — முஸ்லிம்கள் 74, 403, சிங்களவர் 86, 341.

விகித அடிப்படையில் தமிழர் 36. 4 சத வீதம் முஸ்லிம்கள் 29 சத வீதம் சிங்களவர் 33. 6 சத வீதமாகும்.

டட்லி - செல்வா ஒப்பந்தம் 1965 ல் செய்யப்பட்டது. அந்நேரம் 1963ம் ஆண்டு குடிசன மதிப்பீடு இருந்தது. அதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் இன விகிதாசார அடிப்படை வருமாறு:-

தமிழர் 54, 050 (39 1 சத வீதம்) முஸ்லிம்கள் 42 560 (30 8 சத வீதம்) சிங்களவர் 40,950 (29 6சதவீதம்) 1963ம் ஆண்டு குடிசன புள்ளி விபரத்தையும் 1981ம் ஆண்டு குடிசன புள்ளி விபரத்தையும் ஒப்பு நோக்கும் பொழுது 1981ல் தமிழர் தொகை இம்மாவட்டத்தில் சுமார் 3 சத வீதத்தாலும் முஸ்லீம்கள் தொகை சுமார் ஒரு சத விகிதத்தாலும் குறைய சிங்களவர் தொகை சுமார் 4 சத விகிதத்தால் கூடியுள்ளது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட பொழுது 1953 ம் ஆண்டு குடிசன புள்ளி விபரம் இருந்தது அதன் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் இனவிகிதாசாரம் விபரம் வருமாறு:. தமிழர் 44 7 சத வீதம், முஸ்லிம்கள் 34. 1 சத வீதம், சிங்களவர் 18. 2 சத வீதம்.

இதை 1981ம் ஆண்டு குடிசன புள்ளி விபரத்தோடு ஒப்பிடுகையில் 1981ம் ஆண்டில் தமிழர் தொகை 8. 3 சத வீதத்தால் குறைந்துள்ளது. முஸ்லிம்கள் தொகை 5 1 வீதத்தால் குறைந்துள்ளது. ஆனால் சிங்களவர் தொகையோ 15. 4 வீதத்தால் கூடியுள்ளது.

இவற்றுடன் குடிசன புள்ளி விபரம் முதன் முதலாக திரட்டப்பட்ட 1827ம் ஆண்டு விபரங்களை பார்க்க வேண்டும். திருகோணமலை மாவட்ட விபரம் வருமாறு:- தமிழர் 15, 663 (81 8 சத வீதம்) முஸ்லீம்கள் 3 245 16 9சத வீதம்) சிங்களவர் 250 (1. 3 சத வீதம்)

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 1981ம் ஆண்டு சனத்தொகை வருமாறு:- தமிழர் 238, 216 (72 சத வீதம்) முஸ்லீம்கள் 79, 317 (24 சத வீதம்) சிங்களவர் 10,646 (3 2 சத வீதம்).

1963ல் இம்மாவட்ட சனத்தொகை விபரம் வருமாறு;- தமிழர் 141,590(72 2 சதவீதம்) முஸ்லிம்கள் 45, 920 (23. 4சத வீதம்) சிங்களவர் 6,580 (3 4சதவீதம்)

1953 குடிசன மதிப்பீட்டின் போது அம்பாறை தனி மாவட்டமாக இருக்கவில்லை அது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மாகாணங்கள் என்று யூ. என். பி. உட்பட சகலராலும் ஒத்துக் கொள்ளப்பட்டிருந்தும் விசேடமாக திருகோணமலை மாவட்டத்தை சிங்கள மாவட்டமாக்க வேண்டும் என்ற அரசின் எண்ணம் தெளிவாகி

(6ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

III - பிறந்த மண்ணில் பெற்ற பாராட்டும் அவர் அங்கே ஆரம்பித்த கல்விப்பணியும்

மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பண்டிதர் ஒருவர் பெருமை தர, வவுனியா மாவட்டத்துக்கு வேறொருவர் பெருமையளிப்ப, யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதிக்கு மகளிர் இருவர் பெருமை கொடுப்ப, தென்மராட்சிக்குப் பெருமை நல்கிய தங்கள் மட்டுவில் சின்னத்தம்பி கணபதிப் தெரிவித்தவேளையிலே மட்டுவில் லோக்காரன் என்னும் செல்லப்பா அவர்கள் இரட்டைப் பட்டாக மடித்த பெரிய தங்கச்சங்கிலியைப் பண்டிதமணி அவர்களுக்கு அணிந்து பாராட்டினார்.

தென் மராட்சியிலே புறமதப் பாடசாலைகள் எழுவதற்குத் தலைமையகம் சாவகச்சேரியாயிருந்தது. அவர்கள் அர நாவலர் காவிய பாடசாலையை மனதிற் கொண்டு சிறிதளவாயேனும் அந்த அடிப்படையில் தாமும் ஒரு காவிய பாடசாலையைத் தமது மட்டுவில் பண்ணில் முளைகொள்ளச் செய்ய முயன்றபோது, உள்ளூர் முகாமையாளர் செல்லப்பா அவர்கள் முழுமூச்சாக உதவிபுரிவதற்கு முன்வந்தார்

காவிய பாடசாலையிற் படிக்கவந்த சிறுவர்கள் ஆத்திசூடி, கொன்றை

## செந்தமிழிற் கண்ணகியின் தெய்வத்திறம்பாட மைந்தர்காள் 'வம்மின்' என அழைத்தார்

பிள்ளை அவர்களைப் பாராட்டாமல் தாங்கள் இருப்பதா எனக் கருதிய தென்மராட்சி ஊரவர்கள் எல்லோரும் உழுவலன்போடு எழுந்தார்கள்.

லோக்காரன் என்று புகழ்பெற்றிருந்த மட்டுவில் செல்லப்பா அவர்களும், வரகவி எனப் புகழ்பெற்றிருந்த சரசாலை சின்னையா அவர்களும், பிரசித்த நொத்தாரிசுவாக இருந்த மட்டுவில் கந்தர் அவர்களும் இன்னும் பலரும் முன்னணியில் நின்றார்கள். மட்டுவில் உரையாசிரியர் வேற்பிள்ளை அவர்களின் மைந்தர்களான திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், மகாலிங்கசிவம், கந்தசுவாமி, நடராசா ஆகிய ஐவரும் அவர்தம் நண்பர்களும் வந்திருந்தார்கள்.

மகாலிங்கசிவம் அவர்களின் தலைமையில் கோலாகலமாகக் கொண்டாடப் பெற்ற விழாவிலே விழாநாயகமாக இருந்த பண்டிதமணி அவர்களுக்குப் பலர் பாராட்டுரை வழங்கியும் மாலையிட்டு வாழ்த்தியும் தங்கள் மகிழ்ச்சியைத் சாங்க உதவி பெறுவதற்கு நல்ல வாய்ப்பும் வசதியுமிருந்தன அந்த வேளையில் சைவம் பரப்புவதற்குச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் தோன்றியது தென்மராட்சியில் முன்னர் காரைநகர் அருணாசலம் அவர்கள் முயற்சியால் எழுந்த பாடசாலைகளைப்போல வேறும்பல பாடசாலைகள் ஊர்கள்தோறும் எழுதல் வேண்டும் எனக் கருதி செல்லப்பா அவர்களும் நொத்தாரிசுகந்தர் அவர்களும் எடுத்த முயற்சியால் சந்திர மௌலீசர் வேந்தன், உலக நீதி, நறுந்தொகை. மூதுரை, நல்வழி, நன்னெறி முதலியன படித்தபின், பழமலை அந்தாதி முதலிய நூல்களையும் பழைய பண்பாட்டு முறையிற் கற்றுவந்தார்கள் அவர்களுக்கு வேண்டிய அடிப்படை இலக்கணத்தையும் பண்டிதமணி அவர்கள் அமைவாகச் சொல்லிக் கொடுத்தார். மாணாக்கர்கள் மாலை நேரத்தில் அயலில் உள்ள பன்றித் தலைச்சி அம்மன் கோயில் வலம் வரும்போது மனங்

**க. சி. குலரத்தினம்**

வித்தியாசாலையும் சாந்தநாயகி வித்தியாசாலையும் உருவாயின. இவற்றுக்கு வேண்டிய அரசாங்கப் பதிவும் உதவியும் பெறுவதற்குச் சைவவிருத்திச் சங்கம் உடனடியாக உதவியது இவ்விருவித்தியாசாலைகளுக்கும் முறையே செல்லப்பா அவர்களும் கந்தர் அவர்களும் உள்ளூர் முகாமையாளராகத் தெரியப் பெற்றனர்

பண்டிதமணி அவர்கள் தம்மை உருவாக்கிய கொண்டு பாடி மகிழ்ந்து வரங்கேட்பதற்கு வாய்ப்பாகப் பண்டிதமணி அவர்கள் கண்ணகி அம்மன் தோத்திரம் என்னும் சிறிய நூலொன்றைத் தயாரித்துக் கொடுத்தார்.

எளிய இனிய தமிழில் சிறுவர்கள் தாளம்போட்டுப் படிக்கத்தக்கதாக எண்பத்தைந்து கண்ணிகளைக் கொண்ட இச்சிறு நூலை அவர் 1926 ஆம் ஆண்டுகளுக்குச் சமமான குரோதன ஆண்டு பங்குனி மாதத்திற் பாடிக் கொடுப்ப, திரு. நா. ஆறுமுகம் என்பாரின் நினைவாக அவர் மைந்தன் நடராசா அவர்கள் அதனை அச்சிட்டுக் கொடுத்தார்.

"செந்தமிழிற் கண்ணகியின் தெய்வத் திறம்பாட
மைந்தர்காள்! வம்மின் மதிகிரை—முந்திப்போய்
ஆலமர நீழலமர் ஐங்கரத் தெங் கோமானைச்
சாலத் தொழுதெழுவோம் தான்"

இவ்வாறு தம்வழிபடு கடவுளாய விநாயகப் பெருமானை வணங்கிக்கொண்டு, அரசியல் பிழைத்தவர்களுக்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏற்றலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் காரணமாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் அருளியமுறையை மனத்திற்கொண்டு தாமும் பாடுவாராயினர்.

"அரசியல் பிழைத்தோருக் கறங் கூற்றம்
அருவினை யுருத்துவந்திடு சீற்றம்
உரைசால் பத்தினிக் குயரேற்றம்
உரைக்குமே இளங்கோ வடி மாற்றம்.

கண்ணகித் தாயே கனங்குழையே
கடைக் கணிப்பாய்கருணாகரியே
பன்றித் தலைச்சி யெனும் பெயரே
படைத்தாய் எமக்கோர் பெரும் பெயரே.

மாட்டுத் தலைநீ மாற்றினையே
மனசிற் றுயரை ஆற்றினையே.

கண்ணிழந் தோர்க்குக் கண்ணளித்தாய்
கனவுப் பொருளுக் குளவு சொன்னாய்.

கண்ணே வருக கனிவருக
கற்பின் கொழுந்தே நனிவருக

பொன்னே வருக மணிவருக
பூங்கோ தாயென் னுயிர் வருக
பக்திபெ றற்கோர் வரந்தருக
பாவ மறற்கோர் வரந்தருக.

சித்திபெற ற்கோர் வரந்தருக
செந்தமி ழுக்கோர் வரந்தருக.

நோயக லற்கோர் வரந்தருக
நுண்ணுணர் வுக்கோர் வரந்தருக

இவ்வாறெல்லாம் பாடி வலம்வந்து வணங்கி நின்று வரங்கேட்ட பிள்ளைகள், மேலும் நாடு வளம் பெறுதற்கும் ஐந்தெழுத்தோடு மணி நீ ரோங்கவும், ஆலயந்தோறும் நல்விழா வோங்கவும் இறைவியை [illegible] கண்ணகி தோத்திரம் அமைந்துள்ளது.

—(வளரும்)

# மக்கள் அவலமுற யாழ். ஆயர் மௌனியாக இருக்க வேண்டுமா, என்ன?

"தமிழ் மக்களின் உயிர்ப் பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்று யாழ்ப்பாண ஆயர் வண. தியோகுப்பிள்ளை அவர்கள் விடுத்த கோரிக்கையை இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் நிராகரித்துள்ளது."

-இவ்விதம் அண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்தி ஒன்று வெளியிட்டிருந்தது'

ஆக்கிரமிப்பும் மனிதப் படுகொலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பிரதேச எல்லைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் யாழ் ஆயர்

இன மத அரசியல் நோக்குகளுக்கு அப்பால் நின்று நடந்தனவற்றை - நடப்பனவற்றை சந்தேகத்துக்கிடமின்றி நன்கு புரிந்துள்ள ஓர் ஆன்மீகத் தலைவர் அவர்.

மக்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உயர் மதிப்பிற்கும் முற்று முழுவதும் தகுதி வாய்ந்த ஒரு கண்ணியமான தலைவர்.

எந்தவித சித்தாந்தங்களினாலும்—

இதுவரை மேற்கொள்ளப்பட்ட எந்த உபாயங்களினாலும்—

காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளையும் அழிவு சிதைவுகளையும் தடுத்து நிறுத்த இயலவில்லை இந்நிலையில், கடைசி எத்தனமாக ஐக்கிய நாடுகள் நிறுவனத்திற்காவது குறித்த பிரச்சினையை கொண்டு போய்ப் பார்க்கலாமே என்ற மன நோக்கில் அவர் விடுத்த அர்த்த பூர்வமான கோரிக்கையில் கத்தோலிக்க ஆயர் மன்றம் எவ்வகையில் தவறு காண முடியும்?

தனது மறைமாவட்ட எல்லைக்குள் - அதன் சூழலில் நேற்றும் இன்றும் எந்நாளும் அநீதி, அக்கிரமங்கள், படுகொலைகள் நடைபெற்று மக்கள் அவலக்குரல் எழுப்பும் பொழுது ஒரு பொறுப்பு வாய்ந்த ஆன்மீகத் தலைவர் - ஒரு மறைமாவட்ட ஆயர் - கண்மூடி வாய் பொத்தி மௌனியாக இருக்க வேண்டுமென்பது தான் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் நிராகரிப்பிற்குக் காரணமோ?

'பாதிப்புகளுக்கு அப்பாற்பட்ட மறை மாவட்டங்களின் எல்லைகளுக்குள் வதியும் கத்தோலிக்க ஆயர்களுக்கு யாழ் ஆயரது கோரிக்கையின் ஆழமான நிலைப்பாடு புரியவில்லையே' என யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க மக்கள் பெரிதும் கவலை கொள்கின்றனர்.

அதே நேரத்தில் யாழ் ஆயரது கோரிக்கையை அவர்கள் மனப்பூர்வமாக

(7ஆம் பக்கம் பார்க்க)

**- எட்வேட் ஜோர்ஜ் -**

## ஜோர்ஜ் டிமிட்ரோவ்

ஜோர்ஜ்டிமிட்ரோவ்-- வரலாற்றில் மறக்க முடியாத பெயர். ஜெர்மனிய பாசிச கொடுங்கோலன் ஹிட்லர் அவர் மீது சதிக்குற்றம் சுமத்தி கைது செய்தபோது அவனுடைய நீதிமன்றத்தையே பிரசார மேடையாக்கி அவனுடைய மனித குல விரோதச் செயல்களை அம்பலப் படுத்தியவர் அவர்.

பாசிசத்தை முறியடிப்பதற்காக ஐக்கிய முன்னணியின் அவசியத்தை வலியுறுத்தியவர்

மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்தின் செயலளராக இருந்தவர். உழைக்கும் மக்களின் விடுதலைக்காக தம் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அவருடைய நினைவு நாள் ஜூலை 2.

பாசிசத்தின் குறிக்கோள் எவ்விதமான தங்கு தடையுமின்றி கூடிய அளவுக்குச் சுரண்டுவதாகும் ஆனால் அது பேசுவதெல்லாம் தேர்ச்சிமிக்க முதலாளித்துவ எதிர்ப்பு வாய் வீச்சாகும்

கொள்ளைத்தனமான முதலாளி வர்க்கம், வங்கிகள், முதலாளித்துவ கூட்டுக் கம்பெனி டரஸ்டுகள், நிதி மூலதனத் திமிங்கிலங்கள் ஆகியவை மீது மக்களுக்குள்ள மட்டற்ற வெறுப்பைப் பயன்படுத்தி அரசியல் பக்குவம் குறைந்த மக்களுக்கு ஆசைவார்த்தை காட்டி முழக்கங்களை அது முன்வைக்கும்.

ஜேர்மனியில் 'தனிநபர் நலன்களைக் காட்டிலும் பொது நலன்கள் உயர்ந்தவை முக்கியமானவை' என்னும் ஏமாற்று முழக்கத்தை முன்வைத்தது.

இத்தாலியில் 'நமது அரசு முதலாளித்துவ அரசு அல்ல ஒன்றிணைக்கப்பட்ட கூட்டரசாகும்' என்று அது கூறியது

ஜப்பானில் 'சுரண்டலற்ற ஜப்பான்' என்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 'செல்வத்தைப் பங்குபோட்டுக் கொள்வது' என்றும் இவ்வாறாக வாய்ப்பந்தல் அமைத்துக் கொண்டிருக்கின்றது பாசிசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியூக மந்தியின் சாதுர்யம்

ஒரு குளத்தில் ஒரு முதலை வசித்து வந்தது. அது தன் பெண் முதலையிடம் வெகு பிரியமாக இருந்தது. அது கேட்கும் எதையும் உடனே நிறைவேற்றிவிடும்.

அந்தக் குளத்தின் பக்கத்தில் உள்ள சோலையிலே குரங்குகள் இருந்தன அவை நாவற்பழங்களை நிறைய விரும்பித் தின்றன. ஒரு முறை முதலையானது கரைக்கு வந்து குரங்கிடம் நாவற்பழங்களை வாங்கித் தின்றது

தனது பெண் முதலைக்கும் கொண்டு போய்க் கொடுத்தது. இவ்வளவு ருசியான நாவற் பழத்தைத் தின்னும் குரங்கின் ஈரல் எத்தனை சுவையாக இருக்கும் எப்படியும் அந்தக் குரங்கைப் பிடித்து வாருங்கள் என்றது பெண் முதலை. அது கேட்டு முதலை குரங்கை எப்படி பிடிப்பது? என்று யோசித்தது.

ஒரு நாள் முதலை கரையில் இருந்தபோது குரங்கு ஒன்று அதனிடம் வந்து, "ஏ முதலையே நான் மறு கரைக்குச் செல்ல வேண்டும். என்னை உன் முதுகின் மேல் ஏற்றிச்செல்வாயா?' என்றது.

முதலைக்கு உடனே மூளை வேலை செய்தது இது தான் நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தது. "அதற்கென்ன, வந்து ஏறிக்கொள். மறுகரையில் விட்டு விடுகிறேன்" என்றது.

குரங்கு மகிழ்ச்சி மிகுதியால் குதித்து ஓடி வந்து முதலையின் முதுகில் ஏறிக்கொண்டது. முதலை குரங்கை ஏற்றிக்கொண்டு தண்ணீரில் நீந்திச் சென்றது. இடைவழியில் முதலை குரங்கிடம் "நீ உன் இஷ்ட தெய்வத்தை வேண்டிக்கொள் உன்னை என் மனைவிக்கு இரையாக்கப் போகிறேன் உனது ஈரலில் என் மனைவிக்கு நல்ல விருப்பம்" என்று கூறியது

இதைக் கேட்டதும் குரங்கிற்குத் தூக்கி வாரிப் போட்டது. ஐயகோ! எப்படி இதிலிருந்து தப்புவது? என்று யோசித்து — சட்டென அடடா 'இதனை முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா' எனது ஈரலையெல்லாம் மரத்தில் அல்லவா வைத்து விட்டு வந்து விட்டேன் இப்போது என்ன செய்வது! என்றது.

அதைக் கேட்ட முதலை, "அப்படியா சங்கதி உன்னை திரும்பவும் கரைக்குக் கொண்டு போய் விடுகிறேன். ஈரலை எடுத்து வருகிறாயா? என்றது "சரி திரும்புங்கள். சீக்கிரம் போய் எடுத்து வருவோம். தங்களது இல்லாள் பசியோடு காத்திருக்கப் போகிறாள்" என்று புத்திசாதுர்யமாகக் குரங்கு பதில் சொன்னது முதலையும் குரங்கின் பேச்சை நம்பி— கரைக்கு மீண்டது.

கரை வந்து சேர்ந்ததும் தாவி ஓடி மரத்தில் ஏறிக்கொண்ட குரங்கு முதலையைப் பார்த்து, "ஏ! புத்தி கெட்ட முதலையே! ஈரலை எங்கேயாவது வேறாக எடுத்து வைப்பார்களா? இது தெரியவில்லையே உனக்கு நம்பி வந்த என்னை நட்டாற்றில் விட்டு மோசம் பண்ணப் பார்த்தாயே. உனக்கு நான் என்ன கெடுதி செய்தேன் நாவற் பழங்கள் தந்த நன்றியையும் மறந்து விட்டாய். உன் சிநேகம் கூடவே கூடாது. துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்று தெரியாமலா சொன்னார்கள். என்று கைதட்டிக் கூறியது.

வெட்கித் தலை குனிந்த முதலை கவலையுடன் தண்ணீருக்குள் நீந்திச் சென்றது. கெட்டவரோடு நாம் சினேகம் பண்ணக் கூடாது ஒருவர் செய்த நன்றியை மறக்கக் கூடாது.

இது இக்கதையிலிருந்து நாம் கற்கும் பாடம்.

(மந்தி:- குரங்கு)

- சத்தியா -

## மூளைக்கு வேலை முடியுமா உங்களால்? முயன்று பாருங்கள்!

—செல்வி த உமையாள்—
யா. இ த க பாடசாலை
வண்ணார்பண்ணை

ஓர் ஆற்றைக் கடக்க வேண்டும் இருப்பதோ ஒரு படகு. ஆனால் ஒரு குடியானவன்— ஓர் ஆடு, ஒரு புலி, ஒரு கட்டுப்புல் —ஆகியவற்றுடன் மறுகரைக்குப் போக வேண்டும்.

இதில் நிபந்தனை என்னவென்றால் படகிலோ ஒருதரத்தில் ஒருவர்தான் பயணஞ் செய்யலாம்.

அப்படியாயின் அந்தக் குடியானவன் தனது ஆட்டையும், புலியையும், புல்லுக்கட்டையும் எப்படி மறுகரைக்குக் கொண்டுபோனான்?

—விடை அடுத்த வாரம்—



## அறிந்து கொள்ளுங்கள்

மு. சிறீதரன்
திருநெல்வேலி.

குறிஞ்சி மலர் - 12 வருடங்களுக்கு ஒரு முறைதான் பூக்கும். ஆனால் இதைவிடக் கத்தாளை 1 முறை பூக்க 100 வருடங்கள் எடுக்கும் அதனால் இதனை பூட்டானில் 'செஞ்சுரி பிளான்ட்' எனக் கூறுவர்.

★

'ஆர்மடிலோ' எனும் விலங்கு போடும் குட்டிகள் ஒன்றில் எல்லாமே ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருக்கும். இந்த அதிசய விலங்கை நாம் 'அழுங்கு' என்கிறோம்.

☆

ஜீவராசிகளில் ஒரு விமானத்துடன் போட்டியிட்டுப் பறக்கக் கூடியது ஒரு ஈ மட்டுமே. 'டீர் பார்ட்' என்னும் ஈ; இதன் வேகம் ஒரு விமானத்தின் வேகத்தை ஒட்டியது.

★

முதன் முதல் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்தான் முதன் முதல் மேற்கிந்திய தீவுகளில் அன்னாசிப் பழத்தையும் கண்டுபிடித்தார்.

★

உலகிலேயே மிகப் பெரிய மிருகம் நீலத் திமிங்கிலம். இது 106 அடி நீளமும் 195 டன் எடையும் உடையது.

கற்புநிலை இருபாலாருக்கும் சமன்

# பெண்களுக்கு இடப்பட்ட விலங்கை உடைத்தெறிவோம்

பெண்களுக்கு நமது சமூகத்தால் இடப்பட்ட கட்டுப்பாடுகள் பல. இவை பெண்களின் ஒழுக்கத்திற்காகத்தான் நமது மூதாதையரால் கணவனுக்கும் அடிமையாக இருக்கின்ற நிலைதான் இன்றும் இருக்கிறது.

பெண்ணானவள் இவர்களில் தங்கியிருக்கின்ற நிலை அவளுக்கு சுதந்திரம் இல்லையென்பதனைக் காட்டுகிறது.



இடப்பட்டது என்பது எவ்வளவு தூரத்திற்கு சரியானது?

ஓர் ஆண் மகன் எத்தனையோ பெண்களுடன் சல்லாபம் புரிந்து விட்டு வந்தாலும் அவனைக் கணவனாக ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இன்றும் எத்தனையோ பெண்கள் எம்மத்தியில் உள்ளார்கள்

ஆனால் இதே தவறை ஒரு பெண் செய்து விட்டால் அவளைத் திருமணம் செய்வதற்கு எந்த ஓர் ஆண் மகனும் தயாராக இல்லை ஏனென்றால் பெண் கற்பு நிலை தவறியவளாம்

ஆனால் ஆண் மகன் இந்த நெறி தவறவில்லையா?

"கற்பு நிலையென்று சொல்ல வந்தால் அது இருவருக்கும் சமனாதே" என்று பாரதி கூடப் பாடியிருக்கிறான்.

இன்று எம்மத்தியிலே வாழுகின்ற பெண்கள் ஆண்களுக்கும், சமுதாய கட்டுப்பாடுகளுக்கும் அடங்கி வாழுகின்ற நிலை வரவேற்கத்தக்கதா?

ஒரு பெண் ஆரம்பத்தில் பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும், பின்

ஓர் ஆண் மகன் உழைப்பதோடு மாத்திரம் தன் கடமை முடிந்து விடுவதாகக் கருதுகிறான். ஆனால் பெண்ணோ வீட்டிற்கான வரவு செலவுகளை சவனிப்பதுடன்குழந்தைகளின் நலன், சமையல் போன்ற வீட்டுக்குத் தேவையான தொழில்களை செய்கிறாள்.

பெண்ணுடைய இந்த வேலைக்கு கூலிக்கணக்குப் பார்த்தால் ஆண்களின் சம்பளத்தைவிட அவளுக்குக் கூடுதலாக கொடுக்கவேண்டி வரும்.

இதனைவிட கணவனும் மனைவியும் தொழில் செய்கின்ற குடும்பங்களைப் பாருங்கள்.

வீட்டில் மனைவி அதிகாலையில் எழுந்து வீடு, வாசல்களைத் துப்புரவு செய்து உணவு தயாரித்து, குழந்தைகளைக் கவனித்து, இயந்திரமாக வேலை செய்துவிட்டு கணவனோடு அலுவலகத்திற்கு செல்வதற்குத் தயாராகிறாள்.

ஆனால் கணவனோ ஆறுதலாக நித்திரைவிட்டெழுந்து மனைவி சமைத்த உணவைச் சாப்பிட்டு கடமைக்கு செல்கிறான். இங்கே மனைவியானவள் படும் கஷ்டம் சொல்லும் தரமன்று.

வேலை செய்யும் இடங்களில் கூட பெண்களுக்கு குறைந்த கூலி வழங்கப் படுகிறது.

முது மொழிகளில் கூட பெண்களை அடிமையாகத்தான் கணித்துள்ளார்கள் "பெண்புத்தி பின் புத்தி" என்பது போல பெண்களை குறைத்துக் கணித்து வைத்திருக்கிறார்கள்.

பெண்ணடிமைக்கு எதிராக பெண்கள் போராடப் புறப்பட்டால் அவர்கள் குடும்பம் என்னாவது எனத் துணிவின்றியிருந்தால் பெண்களுக்கு விடுதலை கிடைக்காது.

பண்பாடு, கலாசாரம் என்று நமது மூதாதையர்கள் பெண்களுக்குப் போட்ட கட்டுப்பாடுகள் உடைத்தெறியப்பட வேண்டும்

பெண்களை வெறும் குழந்தை பெறும் இயந்திரமாக நோக்காமல் அவளும் ஒரு சக்தி என்பதனை எல்லோரும் உணர வேண்டும்.

நாம் வாழும் சமூகம் ஒரு முதலாளித்துவ சிந்தனையுள்ள சமூகம். இந்த சமுதாயத்தை மாற்றும் வரை பெண்ணடிமையை மாற்ற முடியாதுதான் ஆகவே முதலில் சமுதாயத்தை மாற்றி பெண்களிற்கு இடப்பட்டிருக்கும் விலங்குகளை உடைப்போம்.

-திருமதி வனிதா துரைசிங்கம்-

## பெண்ணிலை வாதம்

### வரதட்சணை மரதன்!

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஹரிபிரசாத் என்பவர்; வரதட்சணை ஒழிப்புக்காகப் புதிய வழியை கடைப்பிடிக்கிறார்.

'வரதட்சணை ஒழிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை முன் வைத்து மரதன் ஓட்டமொன்றை மேற்கொண்டுள்ளார்

இவரது இந்திய மரதன் ஓட்டம் 1983 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ம் திகதி ஆரம்பமாகியது [illegible] இறுதிப்பகுதியில் முடிவடையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



# இடையில் வந்த வாழ்க்கை இடையிலேயே போகட்டும்!

## ரேவதி கூறுகிறார்

நடிகை ரேவதி திருமணத்துக்குப் பின்னர் நடிப்பதில்லை என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்.

அதனால் கைவசம் உள்ள படங்களான 'புன்னகை மன்னன்' 'மௌன ராகங்கள்', 'இலங்கேஸ்வரன்', 'லட்சுமி வந்தாச்சு' போன்ற படங்களை முடித்துக் கொடுப்பதில் வெகு மும்முரமாக இருக்கிறார் ரேவதி.

ரேவதி சொல்கிறார்:

நட்சத்திர வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுபோன என்னால் இனியும் சினிமாவில் நடிக்காமல் இருக்க முடியாது என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

இதை நான் முற்றுமுழுதாக மறுக்கின்றேன் இடையில் ஏற்



பட்ட வாழ்க்கை இடையிலேயே போகட்டும். என்னைப்போலவே என் அம்மாவும் அப்பாவும் கூட அதையே விரும்புகிறார்கள்.

எனக்கு எப்போதும் யோசனைக்கே இடம் இல்லை

இனி நான் பழைய ஆஷா கேளுண்ணியாக நாட்டிய 'புரோகிராம்' நடத்த இருக்கிறேன் அதுவே எனது எதிர்காலப் பணியாக இருக்கும்.

அதில்தான் ஒரு திருப்தி; ஒரு கலைப்பணி செய்கிறோம் என்ற உணர்வு அங்குதான் ஏற்படுகிறது.

இனி என் கணவரின் உழைப்பில் — அது எப்படிப்பட்ட வாழக்கையாக இருந்தாலும் சரி- அந்த வாழ்க்கையில் இன்பமாகவே வாழ விரும்புகிறேன்' என்கிறார்.

### ராதாரவி - சரிதா வாழ்க வளர்க

ராதாரவி இப்பொழுது முழுக் கதாநாயகன் ஆகி விட்டார்.

இவர் 'வாழ்க வளர்க', இன்னும் இரண்டு படங்களில் கதாநாயகனாக நடிக்கிறார்.

'வாழ்க வளர்க' படத்தில் இவருக்கு ஜோடியாக சரிதா நடிக்கிறார்.

### 'விக்ரம்' பற்றிக் கமல்

கமலின் சொந்தப் படமான 'விக்ரம்' வெற்றிகரமாக இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது.

வெற்றிப் படமாக அமையும் என எதிர் பார்க்கப்படும் 'விக்ரம்' பற்றி கமல் இப்படிச் சொல்கிறார்:

என்னைக் கேட்டால் என் படத்தைப் பொன் குஞ்சு என்று தான் சொல்வேன். ஒரு கமர்ஷியல் படத்தை இப்படியும் எடுக்கலாம் என்பதற்காகவே பெரும் செலவு செய்து இருக்கின்றேன். இதற்குப் பணமும் மனமும் இருந்தாலே போதுமானது.'

'அதாவது... ராஜ பார்வையை எடுத்த அதே மனம்...'?

'மனம் ஒன்றுதான்.

ஆனால் அது காலப் பிரமாணங்களுக்கு ஏற்ப மாறியிருக்கின்றது. அதாவது வளர்ந்திருக்கின்றது' என்றார் கமல்.

★ தயாரிப்பு: பேரின்பம் ★

சபல உணர்ச்சி கிடையாது முடிவு எடுத்தால் எடுத்ததுதான் மறுபடியும் படங்களில் நடித்தால் என்ன என்ற

### ராதிகாவின் பொழுதுபோக்கு

படப்பிடிப்பின் போது இடைவேளைகளில் மற்ற நடிகைகளைப் போல் ராதிகா அரட்டை அடித்துக் கொண்டிருப்பது இல்லை.

சிறிய இடைவேளை கிடைத்தாலும் புத்தகத்துடன் போய் இருந்து விடுவார்

என்ன புத்தகங்களைப் படிப்பதில் அவர் அப்படி ஆர்வம் காட்டுகிறார் என்று நினைக்கிறீர்கள்?

நாவல்—அதிலும் ஆங்கில நாவல்களையே விரும்பிப் படிக்கிறார் ராதிகா.

## டிஸ்கோ சாந்தியின் தங்கையும் வருகிறார்

தமிழ்த் திரையுலகில் கவர்ச்சி நடனம் ஆடுபவர்களின் வரிசையில் முன்னணியில் இருப்பவர் டிஸ்கோ சாந்தி.

டிஸ்கோ சாந்தி நடிகர் ஆனந்தனின் மகள். ஆனந்தனின் இன்னுமொரு மகள் லலிதா குமாரி.

அவரும் சினிமாவில் நடிக்கப்போகிறார்

இதுபற்றி சாந்தி கூறுகையில்,

அவளுக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது அழகாகவும் இருக்கிறாள். அத்தோடு எல்லாவித சண்டைகளும் தெரியும்.

நிறைய தயாரிப்பாளர்கள் அவளைப் பார்த்து விட்டு, கதாநாயகி வாய்ப்புத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள்.

விரைவில் கதாநாயகியாக அறிமுகமாகும் வாய்ப்பு இருக்கிறது' என்றார்.

## புதிய இயக்குனரின் "ஆயிரம் பூக்கள் மலரட்டும்"

கோவைத்தம்பி தயாரிக்கும் 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' என்ற படத்தை ராம்தாஸ் முதன் முறையாக இயக்குகிறார்.

இயக்குனர்கள் மணிவண்ணன், கே ரங்கராஜ் ஆகியோரிடம் உதவியாளராகப் பணி புரிந்தவர் ராம்தாஸ்

'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' படத்தில் மதர் லேண்ட் பிக்சர்ஸ் ஆஸ்தான கதாநாயகன் மோகன் நடிக்கிறார்.

அவருக்கு இணையாக ரஞ்சனி, கீதா நடிக்கிறார்கள் இசை: நரசிம்மன்.

# காலத்தின் தேவையில் எழுந்த கலையாக்கம்

## 'சங்கிலி' - நாடக விமர்சனம்

சென்ற மாதம் இராமநாதன் கல்லூரியில் கடந்த 3 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினரது ஆதரவில் பல்கலைக்கழக மாணவ, மாணவியரினாலே நடிக்கப்பட்டு மேடையேறியது 'சங்கிலி' எனும் வரலாற்று நாடகம்

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணத்து அரசாட்சி வரலாற்றினைப் பேசும் 'சங்கிலி' நாடகம் இன்றைய காலகட்டத்தில் - தமிழரது அரசியற் சுதந்திரம் குறித்து நிகழும் பரந்துபட்ட போராட்டச் சூழ்நிலையில் மேடையேறியது சாலப் பொருத்தமானதே.

காலத்தின் தேவையையொட்டிய கலையாக்கத்திற்கு இது நல்ல முன்மாதிரியாகும். இம்முயற்சியில் ஈடுபட்டோர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

கலைஞர்களின் உருத்தோற்றத்திலும், அசைவுகளினாலும் சபையோரைக் கவரும் தனித்துவம் 'நாடகம்' என்னும் கலைப்படைப்பினுக்கு விசேடமாக அமையும் இயல்புகளென லாம்.

அவ்வியல்புகளின் [illegible] - மரபு வழிவந்த அரச நாடக அரங்கப் பின்னணிகளது உணர்வுகளுடனும் நினைவுந்தலுடனும் - சங்கிலி நாடகத்திலே தரிசிக்க முடிந்தது

பொதுவாக இந்த நாடகத்தில் தோன்றிய கலைஞர்களது நடிப்புத் திறன் ஆர்வம் 'சங்கிலி' மூலம் வெளிக்கொணரப் பட்டுள்ளது.

பேச்சுத்தமிழ் ஒட்டிய 'சங்கிலி' நாடகக் கதை சாதாரணர்களையும் கவர்ந்து கொள்ளும் நிலையில் படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் அது வெறுமனே மொழி ரீதியான முதன்மையினைப் பெறுது சமூக சிந்தனையோடு இணைந்தும், (இயைந்தும்) முக்கியத்துவம் பெற்றுக் கொண்டமை சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றாகும்

நாடகக் கதையோட்டமும், சமகால அரசியல் நிலைப்பட்ட உண்மை வாழ்வும் சங்கமித்து உயரிய உச்சப் பயனை இந் நாடகம் அளித்து விட்டது

இது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தீர்க்க தரிசனத்திற்குக் கிடைத்த வெற்றியெனலாம்

பண்டைய வாலாற்றுக் கதைக் கருக்களைக் கொண்ட நாடகத்திற்கு 'சங்கிலி'யை உதாரணமாக்கி கூறலாம். தற்கால மறுமலர்ச்சிக் கால கட்டத்து நாடகமாயும் அமைகின்றது 'சங்கிலி'

முதல் மூன்று காட்சி



களும் 'அரச பாத்திரங்களது அசைவியக்கங்களாகவே' அமைந்து விட்டன. ஒப்பனைக் கலையின் நுணுக்கங்கள் பேணப்படாமையினால் முதன் மூன்று காட்சிகளும் அரச உடுப்பைப் போட்டுக் காட்டும் உற்சாகக் காட்சிகளாகவே அமைந்தன.

இக்கட்டங்களில் பாத்திரக் குறைபாடுகள் வெளிப்படையாகவே தெரிந்தன. குறிப்பாக சங்கிலி மன்னனின் அண்ணனாக நடித்த பரநிருபசிங்கன் என்ற பாத்திரம், வேடத்திற்கு ஏற்ற வசனகம்பீரமின்மையால் சோடை போனதாகி விட்டது. மந்திரிமாருக்குரிய அவைக்களப்பண்புகள் அசைவுகளின் மூலமும், உணர்ச்சிச் சுளிப்புக்களின் வாயிலாகவும் லாவகமாகப் புலப்படுத்தப்பட்டிருக்கலாம்.

மேடையைப் பயன்படுத்தும் திறன்; நடை; இருக்கைமுறை; முகத்தோற்ற வேறுபாடுகள்; கைகளைப் பின்னிக் கருத்துக்களைக் குறிப்பால் உணர்த்தும் பண்பும் சிந்திக்கும் குறிப்பும்; நிறுத்தப் பண்புகளுடன் வசனங்களைப் பேசும் பாங்கு— என்பன இன்னும் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருத்தல்வேண்டும்.

அரங்கில் ஒளியமைப்பு சிறப்பாக இன்மையால் கலைஞர்களது முகபாவனைகளையும், நுணுக்க நடிப்புத்திறனையும் காணவியலாது போய்விட்டது.

திரையினை இழுத்திழுத்து ஒவ்வொரு காட்சிக்கிடையிலும் காலந்தாழ்த்தியமை சபையோரது பொறுமையைச் சோதிப்பதாயும்; நாடகத்தில் இடைவெளியேற்பட்டதை — ஒரு தொடர்பறுந்த உணர்வைப் பார்வையாளரிடத்தே ஏற்படுத்துவதாயும் அமைந்து விட்டது.

'பல்கலைக்கழக மாணவர்கள்' மேடையேற்றும் நாடகம் என்றளவில் 'சங்கிலி'யின் முதல் மேடையேற்றம் எதிர்பார்த்த தரத்தைத்தந்து நிற்கவில்லை.

எது எவ்வாறெனினும் பல்கலைக்கழகத்துக் கலைப் பாரம்பரியத்தின் உயர் தரம்—கலைத்துவ மேதைமைப்பண்புகள் இச்சங்கிலியினூடேயும் வெளியுலகும் - கலையுலகும் பெற்றுக் கொள்ளவேண்டும். முயல்வார்களா?

-கனகசபாபதி நாகேஸ்வரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வு

## ஒருவகை நாடகம்

மனித வாழ்க்கையென்பது ஒரு நாடகம். இந்த நாடகத்தில் உன்னுடைய பங்கை நன்ருக நடி.

நீ நல்லவனுக இருந்தால், இந்த உலகம் முழுவதும் உனக்கு நல்லதாக இருக்கும்.

நல்லது அல்லது கெட்டது என்பது எதுவும் கிடையாது. எண்ணம் அவ்வாறு செய்கின்றது. உணவு, தண்ணீர், நெருப்பு ஆகியவற்றை விட இரக்கம், அன்பு, சகோதரத்துவம் ஆகியவை மனிதனுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றது.

கீழான சுபாவத்தை கவனித்து வா. அது படிப்படியாக மேலும் மேலும் அமைதி பெறும். நீ உன்னுடைய குறைகளைக் கண்டுபிடிக்க முடியும்.

தெய்வீக வாழ்க்கை முழுமையானது. எல்லையற்றது பரிபூரணமானது. ஆனந்தமயமானது ஆகவே, தெய்வீக வாழ்க்கை வாழ். சரியாகச் சிந்தனை செய். ஜாக்கிரதையாக முடிவெடு சாமர்த்தியமாக வேலை செய்.

ஓ! மனிதனே! உன்னைத் திருத்தியமைத்துக் கொள். மேல் நோக்கிப் பறந்து செல். ஞானி ஆகு உன்னுடைய ஆன்மாவை அறிந்து விடுதலை பெறு

### ஸ்ரீ சுவாமி சிவானந்தா

வெல்லுவதும், பலவீனத்தைக் கடந்து செல்வதும், சந்தோஷத்திற்கு அழைத்துச் செல்லும் பாதைகளாகும்

இந்திரியங்களின் போராட்டம் பயங்கரமானது தைரியமாகப் போராடு. நீ அவைகளை வென்றே தீரவேண்டும்.

மாமிசத்தின் மீதுள்ள மோகம் (அதாவது சரீரத்தில் மீதுள்ள மயக்கம்) உன்னுடைய வெல்ல முடியாத எதிரியாகும் இடைவிடாத தியாகத்தின் மூலமாக ஆன்மாவில் வசித்துக்கொண்டு இந்த விரோதியை வெல்.

தற்சோதனை செய்து பார். மனத்தைக் கூர்ந்து

உன்னுடைய மனத்தை எந்தக் கணத்தில் இறைவன் பக்கம் திருப்புகின்ருயோ, அப்பொழுதே நீ அளவற்ற பலத்தையும் அமைதியையும் அடைவாய் எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையே தருது. இது உன்னுடைய வாழ்க்கையை வளமுடையதாக்கி, உன்னை சந்தோஷமுடையவனுகவும், அமைதியுடையவனுகவும் செய்யும்.

விழிமின். எழுமின்.

உன்னையறிந்து விடுதலை பெறு ✻

# மற்றவர் எம்மை மதிப்பீடு செய்ய உதவுவது என்ன?

உஷ்ணத்தை எதனுல் அளக்கிருேம்? சென்டி கிரேட்டால் அளக்கிருேம்.

தூரத்தை எதனுல் அளக்கிருேம்? மீட்டரால் அளக்கிருேம்.

காலத்தை எதனுல் அளக்கிருேம்? மணியாலும், நிமிடங்களாலும் செக்கன்ட்களாலும் அளக்கிருேம்.

அதுபோல—

நம்முடைய திறமையை எதனுல் அளப்பது?

திறமையை அளக்க தர்மா மீட்டர் இல்லை மீட்டர் ஸ்கேல் இல்லை. கடிகாரம் இல்லை.

நம்முடைய திறமையை அளக்க வெற்றியைத்தான் நாம் அளவுகோலாகப் பயன்படுத்த வேண்டும்.

அதை வைத்துத்தான் உலகம் நம்மை எடைபோடுகின்றது.

''அந்த ஆளுக்கு உடம்பு பூராவும் மூளை'' என்று சொல்கிருர்களே, அதுபோல உங்களுக்கு உடம்பு பூராவும் மூளை இருந்தால் போதாது

மூளை இருக்கிறது என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது—

மற்றவர்கள் தெரிந்து கொள்ளும்படி நம்முடைய திறமையை நாம் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்.

நீங்கள் கடைத் தெரு வழியாகப்போகும்போது இரண்டுபக்கமும் பாருங்கள்

எவ்வளவு கடைகள் இருக்கின்றன துணிக் கடைகள், ஸ்வீட் ஸ்டால்கள், பொம்மை ஷாப்புகள், என்று எவ்வளவு இருக்கின்றன.

அந்தக் கடைகளை எல்லாம் சாக்குப்பை போட்டு மூடியா வைத்திருக்கின்ருர்கள்?

இல்லை!

பளீர் என்று விளக்கும் போட்டிருக்கருர்கள்

கண்ணுடி ஷோகேஸ்களைச் சுத்தமாகத் துடைத்து வைத்திருக்கின்ருர்கள்.

வருகின்றவர்களை வரவேற்க இதமான ஏர் கண்டிஷனர்களைப் பொருத்தி வைத்திருக்கின்ருர்கள்.

உள்ளே இருக்கும் பொருள் நன்ருக இருக்கிறது என்பதைவிட இருக்கிற பொருளைத் திறமையாக வெளிக் காட்டுகிருர்களா என்பதை வைத்தே அவர்களது விற்பனை அதிகமாகும் அல்லது குறையும்

காட்டில் காய்ந்தநிலா என்று கேள்விப்பட்டதில்லையா?

அங்கே நிலாகாய்ந்து யாருக்கு என்ன லாபம்?

குழந்தைகளுக்குச் சோறு ஊட்டும் அம்மாக்கள் இருக்கும் இடத்தில் நிலாக் காய்ந்தால் குழந்தை சாப்பிட உதவும்

காதலர்கள் குலாவுகிற இடத்தில் நிலா வெளிச்சம் இருந்தால் தான் காதலன்... காதலியின்...

முகத்துக்கு உவமை சொல்ல உதவும்

கலைஞர்கள் வீட்டு முற்றத்தில் நிலாக்காய்ந்தால் 'நிலாக் காயுது நேரம்

### "யன்னல்"

நல்ல நேரம்' என்று பாட்டு எழுத உதவும்.

அது போல—

நமக்குத் திறமையிருக்குதென்ருல் அதைக் காட்டிலே காயவிட்டுப் பயனில்லை.

அதை சாக்கினுள் போட்டுக்கட்டி ஒரு மூலையில் வைப்பதிலும் பிரயோசனமில்லை.

உடனே—

ஒரு ஷோகேஸ் வேண்டும்.

உடனே

சில டியூப் லைட்கள் வேண்டும்.

உடனே—

தூசி தட்டக்கூடிய சில துணிக் கிழிசல்கள் வேண்டும்

நம்முடைய திறமையை இப்படி வெளிச்சம் போட்டுக்காட்டினுல்தான் மற்றவர்கள் பார்வையிலே பட்டு வெற்றி நம்மை அடைய முடியும்.

Contents ஐ விட Container முக்கியம் என்பார்கள் விளம்பர உத்தி தெரிந்தவர்கள்

ஒரே மாதிரி பிஸ்கட்டை உற்பத்திசெய்யும் இரு கம்பனிகள் இருந்தன.

ஒன்றுபழுப்புக்காகிதத்தில் அந்த பிஸ்கட்டுகளை சுற்றி விற்பனைக்கு அனுப்பியது

மற்றது வண்ணக் காகிதத்தில் பேக் செய்து சலஃபன் காகிதத்தை மேலே ஒட்டி அழகுபடுத்தி விற்பனைக்கு அனுப்பியது இரண்டாவது கம்பனி பிஸ்கட் விற்பனை பல மடங்கு கூடியது.

ஜப்பானில் போய் ஒரு பிஸ்கட் பாக்கெட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# சொன்னுர்; செய்தார்

தனது பெண் குழந்தைகளை வீட்டினுள் கட்டுப்பாட்டோடு வளர்த்தார் தனவந்தர் ஒருவர்.

இந்தப் பணக்காரரின் குறுகிய கட்டுப்பாட்டை உடைக்கவேண்டும். அவருடைய வழி பிழையானது—என்பதைச் சுட்டிக்காட்டப் போனுன். அவருடைய பக்கத்து வீட்டுச் சிறுவன்.

ஆனுல் பணக்காரன் அதை ஏற்கவில்லை

என்னுடைய பிள்ளைகள் சட்டவரம்புக்குள் தான் வளரவேண்டும். 'எங்கே எந்தப்பயல் பிள்ளையாவது உள்ளே போய் என் பிள்ளைகளோடு பேசட்டும், பார்க்கலாம்' என்று சவால் விட்டார்.

'இது என்ன பிரமாதம் சார், நானே செய்து காட்டுகிறேன்.' என்று சிரித்தபடி சொல்லிவிட்டுப் போய்விட்டான் அந்தச்சிறுவன் அதை ஏதோ விளையாட்டாகப் பணக்காரர் எடுத்துக் கொண்டார்.

பொழுதுசாயும் வேளையில் பணக்காரரின் வீட்டுவாசலில் ஒரு சிறுமி நின்றுகொண்டு அழைத்தாள்.

வெளியே வந்த பெரியவரிடம் 'ஐயா நான் பக்கத்து ஊர்க்காரி என்னோடு வந்தவர்கள் என்னை விட்டுப் போய் விட்டார்கள் இரவில் ஊருக்குப்போக பயமாக இருக்கிறது இரவு மட்டும் தங்க இடம் தருவீர்களா?' என்று [illegible]ரந்து கேட்டாள்.

பணக்காரருக்கு மிகவும் பரிதாபமாக இருந்தபடியால் தன் பிள்ளைகளுடன் தங்க அனுமதி அளித்தார். பசியாற பலகாரம் கொடுத்து அந்தச் சிறுமியுடன் அவ் வீட்டுப் பிள்ளைகள் அன்பாக பேசினுர்கள். சேர்ந்து விளையாடினுர்கள்.

இரவு மணி எட்டு ஆன போது வாசலுக்கு ஓடிப் போய் பணக்காரர் இடத்தில் 'நேரமாகிவிட்டது. அண்ணு அழைக்கிருர் போய் வருகிறேன்.' என்று கூறியபடி தனது பெண் வேஷத்தைக் களைந்தபடி வெளியே ஓடினுன் அன்று சபதம் போட்ட பக்கத்து வீட்டுச்சிறுவன்.

பணக்காரர் அசந்து போய் தனது தவறை உணர்ந்தார். பெண் பிள்ளைகளை ஒருபோதும் குறுகிய கட்டுப்பாட்டுக்குள் வளர்க்கக் கூடாது என தீர்மானித்தார். அதனுல், அவர் தனது பெண் பிள்ளைகளை வெளியே விளையாட அனுமதித்தார்.

தனது கருத்து சரியானது என்பதைத் துணிவாக எடுத்துக்கூறி, சாதனை நிலைநாட்டிய பெருமகன் நமது வணக்கத்துக்குரிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் தான். ✻

### - குகா -

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

### தேவப் பிரியன் அசோகன்

(பகுதி 1)

மார்ச்சு 30, 1932

அரசர்களையும் குறுநில மன்னர்களையும் இழித்துக் கூற நான் அஞ்சவில்லை. புகழ்வதற்கும் வணக்கம் செலுத்துவதற்கும் உரிய அம்சம் எதையும் நான் அவர்களிடம் காணமுடியவில்லை

ஆனுல் அரசனுகவும் சக்கரவர்த்தியாகவும் இருந்தும் உண்மையில் பெரியவனுகவும் புகழுக்கு உரியவனுவும் விளங்கிய ஒருவனைப் பற்றியே இப்போது நாம் பேசப் போகிருேம்

அவன் தான் அசோகன்.

சந்திரகுப்த மௌரியனுடைய பேரன். எச். ஜி வெல்ஸ் என்னும் ஆங்கில ஆசிரியர் தம்முடைய சரித்திரத்தின் எல்லைக் கோடுகள் (Out line of history) எனும் நூலில் அசோகரைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிருர்:

'சரித்திரத்தில் பல்லாயிரக்கணக்கில் மண்டிக்கிடக்கும், ராஜமார்த்தாண்ட, ராஜகம்பீர, ராஜகோலாகல, ராஜராஜர்களின் பெயர்களுக்கிடையே அசோகனின் பெயர் ஒப்பற்ற தனிப் பெருமையுடன் ஒரு நட்சத்திரம் போல ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது.

வோல்காவிலிருந்து ஜப்பான் வரையில் அவனுடைய பெயர் இன்றும் கௌரவிக்கப்பட்டு வருகிறது.

சீனுவிலும், திபெத்திலும், அவனுடைய கொள்கையை விட்டுவிட்ட இந்தியாவிலும் கூட அவனுடைய பெருமை வழி வழியாகப் பாராட்டப்பட்டு வருகிறது.

இன்று கான்ஸ்டண்டைன், (Constantine) அல்லது சார்லமேன் (Charlemagne) இவர்களுடைய பெயர்களைக் கேள்வி வாயிலாக அறிந்திருப்பவர்களைவிட அதிகமானவர்கள் அசோகனைப் போற்றி வருகிருர்கள்'

இவர் அசோகனை வானளாவப் புகழ்ந்திருக்கிருர் என்றே சொல்ல வேண்டும்

ஆனுல் அவ்வளவும் தகும்

இந்திய சரித்திரத்தின் இப்பகுதியை எண்ணும் தோறும் எந்த இந்தியனும் விசேஷ ஆனந்தம் கொள்வான் என்பதில் ஐயமில்லை.

கிறீஸ்து சகாப்தம் தொடங்குவதற்கு சற்றேறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னரே சந்திர குப்தன் இறந்து விட்டான் அவனுக்குப் பின் அவனுடைய மகன் பிந்துசாரன் பட்டத்துக்கு வந்து 25 ஆண்டுகள் அரசு புரிந்தான்.

அவனுடைய ஆட்சியில் அமைதி நிலவியிருந்

(6ஆம் பக்கம் பார்க்க)

### நேருவிடமிருந்து இந்திராவுக்கு

# சங்ககாலத்தில் காதல்: நேரடியாக தெரிவிக்கும் வழக்கம் அப்போது இருக்கவில்லை

### தி. கலைச்செல்வி

காதலென்பது உள்ளத்தால் ஏற்படும் உணர்வாகும் இதனைப் பிறர்க்கு இவ்வாறு தானிருக்குமென வரையறுத்துக் காட்ட முடியாது அது அனுபவரீதியில் உணரக் கூடியது

இரு இதயங்கள் பாசத்தினுல் இணைக்கப்பட்டு ஏற்படுத்திக் கொள்ளும் அந்தரங்க கீதமே காதலாக வெளிக்கொணரப் படுகின்றது.

உருவத்தையோ, அழகையோ, ஆடம்பரத்தையோ கண்டு மயங்காது உள்ளப் பிணைப்பினுல் ஏற்படுத்திக் கொள்ளும் தூய உணர்வெனவும் இதனைக் கூறலாம்

தமிழ் இலக்கியத்தில் சமுதாய சூழல மாற்றத்துக்கேற்ப காதலும் மாற்றமடைந்து செல்கின்றது. இக்காதல் லௌகீக நிலையிலும் ஆத்மீக நிலையிலும் நிலவி வருவது உள்ளங்கை நெல்லிக்கனி போல யாவர்க்கும் புலனுகின்றது.

உலகியல் ரீதியான காதல் முறைகள் களவியல், கற்பியலென சங்க காலத்தில் மிக நுண்ணிய முறையில் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

இக்காதல் திணைப் புனத்திலே ஆரம்பமாவதாகவும் காட்சி, ஐயம், தெளிவு, தேறலுக்குப் பின்னரே காதலர் கருத்தொருமித்ததாகவும் கூறப்படுகின்றது.

காதலனே காதலியோ நேரடியாகக் காதலை வெளிப்படுத்தும் முறைமை சங்க காலத்தில் இருக்கவில்லை.

உணர்வின் அடிப்படையில் பேசாத பேச்சுக்களாகத்தான் காதல் பிறந்தது. அக்காலப் பெண்களிடம் நாணம், பயிர்ப்பெனும் பெண்மைக்குரிய குண நலன்கள் கூடுதலாகக் காணப்பட்டன.

காதலன் காதலியை நோக்குமிடத்து அவள், அவனை நேரே பார்க்காது தரையைப் பார்த்து மணலினுள் கால் பெருவிரலினுல் கோடு கீறும் வழக்கமும், அவன் அவளைப் பார்க்காதவேளையில் அவனது அழகினைப் பார்த்து உள்ளூர மகிழ்வதான பெண்மையிலும் சிறந்த பெண்தன்மை அக்காலப் பெண்களிடம் காணப்பட்டது

யான் நோக்குங் கால்
நிலன் நோக்கும்
நோக்காக்கால் தான்
நோக்கி மெல்ல நகும்.

எனும் வள்ளுவர் வாய்மொழி அக்காலப் பெண்களின் பெண்மைக்கு — மென்மைக்கு பொருத்தமுடையதொன்ருக அமைகின்றது

காதலர் சந்திப்புக்களிற்கு தடைகளும் இக்கால சமுதாயத்தில் விதிக்கப்பட்டிருந்தது. காதலன், காதலியைச் சந்திப்பதற்குப் பகற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூவாயிரம் ஆண்டுகள் போயினும் மறவோம்

அன்று;
பாட நினைத்த
பறவைகளின் வாய்கள்
தைக்கப்பட்டன!
பறக்க நினைத்த
பறவைகளின் இறக்கைகள்
பிடுங்கப்பட்டன!
ஆட நினைத்த மயில்களின்
தோகைகள் அறுக்கப்பட்டன!
கூவ நினைத்த சேவல்களின்
குரல்வளை நசிக்கப்பட்டன!
ஒற்றுமையாய் வாழ்வோமென்ற
எம்மவர்களின் குரல்கள் அடக்கப்பட்டன!
பறித்த உரிமையை
திருப்பிக்கேட்ட உள்ளங்கள்
உதைத்துத் தள்ளப்பட்டன!
மண்ணை மீட்க நினைத்தவருக்கு
அடிமை விலங்கு பூட்டப்பட்டன!
அவர்கள் எல்லோரும்
முச்சுவர்களின் நடுவே
தள்ளப்பட்டனர்!
அவர்கள் கோழைகளல்லர்
வீரமற்றவர்கள்
ஆகலால்தான்
ஆறுென்பது பேரும்
கோழைத்தனமாய் சிறைக்குள்
மாய்க்கப் பட்டனர்!
அன்று!
இவர்கள் மட்டுமா?—இல்லை
இவர்களைப் போன்ற
அப்பாவி மக்களுமல்லவா
மாய்க்கப்பட்டனர்!
அன்று மட்டுமா ?
இல்லை; அவை இன்னும்
இன்றும் நடைபெறுகிறது!
ஆனுல்!
நாம் அதை
மூன்ருண்டுகள் மட்டுமல்ல!
மூவாயிரம் ஆண்டுக்கும்
மறக்கமாட்டோம்!

- கே. எஸ். சுதாகர் -

# சிக்கல்களை விடுவிப்பது கணிதம்

### சு. மகாலிங்கம்

சமீபகாலமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் கணிதம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. அங்கு கணித வல்லுனர்களின் பற்ருக்குறைபற்றி அரசியல்வாதிகளும், கைத்தொழிற்றுறையினரும் மிகுந்த கவலை தெரிவித்துள்ளனர் இது ஏன்? புதிய கண்டுபிடிப்பான இலத்திரன் மூளைகள் (Electronic brains) மனிதர்களை விட விரைவாகவும் சரியாகவும் கணிதப் பிரசினங்களை விடுவிக்க உதவவில்லையா? அங்ஙனம் உதவின் கணித வல்லுநர்களின் தேவையை அவை நீக்கவில்லையா?

இத்தகைய வினுக்களுக்கு விடையளிக்க நாம் கணிதம் என்ருல் என்ன? அது எங்ஙனம் பயன்படுத்தப்படுகிறது? என்பவை பற்றி அறிய வேண்டும் எண்கணிதம் என்பது எண்களுடனும் அவற்றின் கணித்தல்களுடனும் சம்பந்தப்பட்டது. குறியீடுகள் அவற்றின் செய்கைகள், தொடர்புகள் பற்றியதே அட்சரகணிதம், உருவங்கள், அவற்றின் பருமன்கள், வெளிகள் பற்றியதே கேத்திரகணிதம். தரவுகளையும், வரைவுகளையும் விளக்க [illegible]வதே புள்ளி விபரவியல்.

மாற்றங்கள், அவற்றின் எல்லைகள், முடிவிலி என்பவை பற்றிய ஆராய்வே நுண்கணிதம். ஆனுல் 'கணிதமோ' இவற்றையெல்லாம் தன்னுள் கொண்டதாய் இவற்றை விட எவ்வளவோ பரந்தும் விரிந்தும் உள்ளது.

கணிதம் என்பது ஒரு சிந்திக்கும் வழி தர்க்க ரீதியான நியாயப்படுத்தலுக்கு உதவும் வழி எனலாம். எனவே கணிதத்தைப் பயன்படுத்தி ஒரு கருத்து சரியானதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கலாம். நாள்தோறும் கணிதத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன அது ஒரு சிந்திக்கும் வழி என்பதினுல் விஞ்ஞானம், அரசியல் தொழிற்றுறைகள் போன்றவற்றிலுள்ள பல்வேறு சிக்கல்களையும் விடுவிக்கக் கணிதம் பயன்படுத்தப்படுகிறது கணிதம் அதற்கெனவுள்ள குறியீடுகளைக் கொண்ட மொழியென்பதால் அது [illegible] எல்லா நாடு[illegible] புரிந்து [illegible]ளக்கூடியதாகவுள்ளது.

சங்கீதத்தைப் போன்று கணிதமும் சமச்சீர் கோலம் ஒத்திசைவு உள்ளதாய் விளங்குவதால் மகிழ்ச்சியூட்டுவதாகவும் சுவையூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

**கவிதைக்கோலம் சங்கீதம், விஞ்ஞானம், சோதிடம் ஆகியவற்றிற்கும் கணிதத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு**

கணிதம் என்பது கோலங்களைப் பற்றிய படிப்பு எனவும் கூறப்பட்டுள்ளது இங்கு கோலம் என்பதால் கருத்து அல்லது வடிவத்தில் காணப்படும் ஓர் ஒழுங்கான தன்மையையேகுறிக்கப்படுகிறது. இத்தகைய கோலம் பற்றிய கல்வி விஞ்ஞானத்திலும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் இத்தகைய கோலம், சமச்சீர், ஒழுங்கு என்ன இயற்கையில் பல இடங்களில் காணப்படுகின்றன. உதாரணமாக ஒளி, ஒலி, காந்தம், மின்னோட்டம், கடல் அலைகள், விமானம் பறத்தல், அணுவின் அமைப்பு போன்றவற்றில் கணிதம் குறிப்பிடும் கோலம் அமைந்திருப்பதனைக் காணலாம்.

நமது நாகரிக வளர்ச்சியை ஆராயின் அதில் கணிதத்தின் பங்களிப்பு மகத்தானது என்பதை உணர்வோம்.

- புதிய விஞ்ஞானக் கோட்பாடுகளின் கண்டுபிடிப்புகள்
- புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்புகள்
- இலத்திரன் மூளையை உருவாக்கல்
- போக்குவரத்து தொடர்புச் சாதனங்களை உருவாக்கல்
- புதிய மருந்துகள் ஊசிமருந்துகளை உருவாக்கல்
- அணுச் சக்தியின் பயன்பாடு
- காலநிலைமுன்கூறல்
- மாலுமிக்கு உதவல்
- கட்டிடங்கள், பாலங்கள் நிர்மாணித்தல்,
- கோள்களின் இயக்கத்தை விளங்கல், விண்வெளிக்கலங்களைச் செலுத்தல்
- ஆயுதங்களை அமைத்தலும் போர்த் திட்டமிடுதலும்
- குடித்தொகை வளர்ச்சியை முன்கூறல்

ஆகியவற்றில் கணிதத்தின் முக்கியத்துவம் மகத்தானது.

கணிதத்தின் பிரயோகமும் அதன் பரப்பும் நாள்தோறும் வளர்ந்து வருகின்றன. பரிசோதனை மூலம், கற்பனைமூலம், காரணப்படுத்தல் மூலம் கணித வல்லுனர்கள் தொழிற்றுறைகள், விஞ்ஞானத்துறைகள் போன்றவற்றில் கணிதத்தைப் பயன்படுத்தி புதிய உண்மைகள், கருத்துக்களைக் கண்டுபிடித்துள்ளனர் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளான விண்கலங்கள், அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள், தானியங்கித் தொழிற்சாலைகள் போன்றவற்றை நோக்கின் கணிதமும் விஞ்ஞானமும் நம் வாழ்க்கையை எவ்வாறு மாற்றியமைக்கின்றன என்பதை உணரலாம்.

ஒவ்வொரு மனிதரும் கணிதவல்லுனராகவோ, விஞ்ஞானியாகவோ ஆக முடியும் என்பதல்ல ஆனுல் தற்போதைய உலகத்தை விளங்கிக் கொள்ள கணிதம் பற்றி ஓரளவு தெரிந்திருக்க வேண்டும். இந்தக் கணித அறிவு பாடசாலையில், வீட்டில், எதிர்காலத் தொழிலில் நாம் வெற்றி பெற உதவும் இத்தகைய மாற்றங்கள் நடைபெறும் நாட்டில் ஒரு நல்ல குடிமகனுக விளங்க கணித அறிவு தேவையாகின்றது.

ஆட்சி நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோர் புதிய கருத்துக்கள் நிறைந்த சிக்கலான உலகத்தில் புத்திசாலித்தனமான முடிவுகளை, தீர்வுகளைப் பெறுவதற்கு கணிதம் பற்றிய செய்திகளை அறிந்தவர்களாக இருக்கவேண்டும்.

கணிதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள விஞ்ஞானம், பொறியியல், புள்ளிவிபரவியல் போன்ற துறைகளில் எதிர்காலத்தில் தொழில் புரியும் எண்ணமுள்ளவர்களுக்கு கணிதத்தில் கூடியதிறமை வேண்டும். எவ்வித கருவிகள் உதவுவதற்கு இருப்பினும் கணிதத்தில் ஆராய்ச்சி, மேற்கொள்ள, அதனைக் கற்பிக்க, அதன் புதிய பிரயோகங்களைக் கண்டுபிடிக்க முயல்வோருக்கு இன்றும் பெரியதேவையிருக்கிறது. அது தொடர்ந்து இருக்கவே செய்யும்.

பெருந் தொகையான எண்களைக் கூட்டுவது, பெருக்குவது போன்ற செய்கைகள் நமக்கு சலிப்பையும் களைப்பையும் ஏற்படுத்தும் கணிதர்க்கும் அது மகிழ்ச்சி தரும் விடயமல்ல. இவற்றைக் குறைப்பதற்கே மடக்கை முக்கூச்சட்டம் (Slide-rule). சிறு கணிதக்கருவி (Pocket Calculator) மின்கணனி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன

கணிதர்கள் களையான, நுட்பமான விடயங்கள் பற்றிய பிரசினங்களைத் தீர்க்கவே தமது நேரத்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பனை வளர்ப்போம்

## பல்வேறு பயன் பெறுவோம்

அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா தெரிவித்த கருத்துகள் சில இங்கு இடம் பெறுகின்றன:

தொகுப்பு .வே வரதசுந்தரம்

யாழ்குடா நாட்டிலும் ஏனைய பிரதேசங்களிலும் உள்ள பனை வளத்தை முற்றாகப் பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை பல மடங்கு பெருக்க முடியும்.

பனம் பொருள்களின் மூலம் நாற்பதுக்கு மேற்பட்ட பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை பனை அபிவிருத்தி சபையினாலும், ஏனையவை சபையின் உதவியுடன் தனியார் கம்பனிகளினாலும் தயாரிக்கப்பட்டவை.

**பனை, நுகர் பொருள்கள்**

தற்போது சபையினால் சந்தைப்படுத்தப்பட்டு உள்ள பொருள்களின் உற்பத்தி நுகர்வுக்குரிய பொருள்களில் பழ உற்பத்திகள், பனம்பானம், பனம் ஜாம், கிரஷ், (Crush) சோஸ் (Sauce) ஆகியவை ஆகும்.

பனம் பானத் தேவையில் பத்து வீதமே உற்பத்தி ஆகிறது. பனம் ஜாம் தேவையின் ஐந்து வீதமும் கிரஷ் ஜூஸ் பதினைந்து வீதமும் உற்பத்தியாகிறது.

**பதநீர் கொண்டு**

பனங்கற்கண்டு, பனஞ்சீனி, வெல்லம், பனம் பாணி, பாம்கோலா ஆகியவை பதநீரை அடிப்படையாகக் கொண்டு இப்போது தயாரிக்கப்படுபவை.

**மதுபானம்**

இதனைவிட மதுபானத்தைப் பொறுத்த அளவில் சாதாரணமான கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தவறணைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

தேவையில் 95 வீதம் உற்பத்தி செய்யப்படுகிறது.

போத்தலில் அடைக்கப்படும் கள் தேவையில் 40 வீதம் உற்பத்தியாகிறது.

இவற்றை விட ஏற்றுமதிக்கு உகந்த பதப்படுத்தப்பட்ட கள்ளைப் பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விரைவில் உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

**மருந்து ஆகும்**

இன்னும் மருந்தாகப் பாவிக்கக் கூடிய, விசேட

## தாயகம்

மாசப் பிரசவத் தாய்மாருக்கு உகந்தலாகரும் வைன், சாராயம், செறிவு குறைந்த மதுசாரம் ஆகியவையும் உற்பத்தி ஆகின்றன.

**கைப்பொருள்கள்**

நீடிய பாவனைக்கு உகந்ததும், அழகில் சிறந்ததுமான பனைமரக் கைப் பணிப் பொருள்களும் தயார் செய்யப்படுகின்றன ஆஷ்றே,(Ash Tray) பென்ஹோல்டர் (Pen Holder) பேப்பர் வெயிற் (Paper Weight) வாக்கிங் ஸ்டிக் (Walking Stick) பொல்லு (Baton) ஆகியவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இவை யாவும் பரீட்சார்த்தமாகச் சபையினால் தயாரிக்கப்பட்டு தருந்தவை என்று உறுதி செய்யப்பட்டவை.

**முதலீடு செய்க**

கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட கம்பனிகள், கூட்டுத்தாபனங்கள், தனியார், பொதுநல ஸ்தாபனங்கள் இத்துறைகளில் முதலீடு செய்து சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவ முன்வருவது அவசியம்.

**ஆலோசனை வழங்கப்படும்**

முதலீடு செய்ய முன்வரும் முதலீட்டாளர்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள், செய்முறைப் பயிற்சி, உபகரணங்கள், வங்கிகள் மூலம் கடன்பெற உதவுதல், சந்தைப்படுத்தல் போன்ற பல துறைகளிலும் உதவ பனை அபிவிருத்திசபை தயாராக உள்ளது.

**தறிப்பதைக் குறைப்பீர்**

எமது பிரதேசத்தில் நாளாந்தம் 300 பனைகள் தறிக்கப்பட்டு வருகின்றன. வீடுகள் கட்டுவதற்கு உரிய பரத்தேவை இதில் முக்கிய இடம் வகிக்கின்றன வியாபார நோக்கமும் இதில் சேர்கின்றது.

80 அடிக்குக் குறைவான உயரமுள்ள பனை மரங்களைத் தறிப்பது தவிர்க்கப்படவேண்டும்.

**பனை நடுக; வளம் பெறுக**

பனை நடுகையில் நாம் ஈடுப வேண்டும். விவசாயத்துக்குத் தகுதியற்ற இடங்கள், குளக்கரை, கடற்கரை வாய்க்கால், புகையிரதப்பாதையின் இருமருங்கும், வேலியோரங்கள். வரம்புகள், பெருஞ்சாலை ஆகிய இடங்களில் பனை நடலாம்.

**வேண்டுகோள்**

வைபவங்களில் பனம் உற்பத்திகளைப் பாவியுங்கள். சிற்றுண்டிச் சாலைகளில் ஹோட்டல் நிறுவனங்களில் பனம் பண்டங்களுக்கு முதலிடம் கொடுங்கள்.

இதனாலே இக்கைத்தொழில்களை ஊக்குவித்துக் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முன்வாருங்கள்

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## 'எய்ட்ஸ்'-காசநோய் இரண்டுக்கும் தொடர்பு

உயிர் கொல்லி நோயான 'எய்ட்ஸ்' நோய்க்கும் காச நோய்க்கும் (ரி. பி) நெருங்கிய தொடர்புண்டு.

விஞ்ஞானிகளின் அண்மைக்கால ஆய்வுகளில் இருந்து இது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

புற்று நோய், நுரையீரல் வீக்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் வரிசையில் காசநோயால் மிகவும் பீடிக்கப்பட்ட நோயாளியையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

பிற நோய்த் தொற்றுகளில் இருந்து உடலைப் பாதுகாக்கும் சக்தியை உடல் இயற்கையாகவே கொண்டிருக்கும்.

எய்ட்ஸ் முதலிய நோய்களுக்கு ஆளாகுபவர்கள் இந்த சக்தியை இழந்து விடுவதால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி உயிரிழக்கின்றனர்

எய்ட்ஸ் நோய்களுக்கு இலக்கானவர்களில் பலரை ஆராய்ந்ததில் அவர்களில் குறிப்பிடத்தக்க விதத்தினர் ஆரம்பத்தில் ஒருவகைக் காச நோயால் பிடிக்கப்பட்டது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய காச நோயால் பீடிக்கப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரில் தொற்று நோயை எதிர்க்கும் சக்தியை இழக்கும் தன்மை — எய்டஸ் நோயின் ஆரம்ப அறிகுறி —கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவர்கள் 136 எய்டஸ் நோயாளிகளை ஆராய்ந்ததில் அவர்களில் 29 பேர் காச நோய்க்கு இலக்கானது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது

போதை வஸ்து பாவிப்பவர்கள் அல்லது ஊசிகள் மூலம் போதை ஏற்றிக் கொள்பவர்கள் — தன்னினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் தான் பெரும்பாலும் பிற நோய்த் தொற்றுக்களை எதிர்த்துப் போராடும் உடலின் வலிமையை இழக்கின்ற நோய்களுக்கு ஆளாகின்றனராம்

### கேக்கினுள் கல்யாணம்

போர்த்துக்கலில் கடந்தவாரம் நடைபெற்ற திருமணம் ஒன்று விசித்திரமானது.

இத்திருமணத்துக்கென 14 மீட்டர் உயரமான கேக்கொன்று தயார் செய்யப்பட்டிருந்தது. அதாவது சுமார் நான்கு மாடிக் கட்டடத்தின் உயரம்

மணமகளின் தந்தை போத்துக்கல் நகரில் ஹோட்டல் ஒன்றில் கேக் தயாரிப்பவராகப் பணி புரிந்து வருகின்றார்.

போர்த்துக்கலின் பிரபலமான தேவாலயம் ஒன்றின் உருவமைப்பைக் கொண்டிருந்த இக்கேக்கினுள் சகல திருமண வைபவங்களும் இடம் பெற்றன. (ஓ)

கராட்டி உடைகளை

## கழுவத் தவறியதற்கு அடித்துக் கொலை

கராட்டி கழகம் ஒன்றில் சீனியர் உறுப்பினர்களுக்குத் தேவையான கராட்டி உடைகளை சலவை செய்து கொடுக்காததற்காக ஜூனியர் உறுப்பினர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார் மற்றொருவர் பயங்கரமாகத் தாக்கப்பட்டார்.

டோக்கியோ பல்கலைக் கழகம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது.

13 சீனியர் மாணவர்கள் 9 ஜூனியர் மாணவர்களை கூப்பிட்டு உடுப்புகளை சலவை செய்யாததற்காக பலமாகத் தாக்கினார்களாம்.

டெட்சுயா நோரி என்ற 19 வயதுப் பையன் சீனியர் மாணவர்களினால் சுமார் 20 நிமிட நேரம் மாறி மாறித் தாக்கப்பட்டானும்.

உள்ளுறுப்புக்களில் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் அவன் பின்னர் மரணமானான்.

மற்றொரு ஜூனியர் மாணவன் படுகாயமடைந்தான். ஆறு ஜூனியர்கள் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆறு சீனியர் மாணவர்களைப் பொலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

### ஐன்ஸ்டீனின் கண்ணாடிகள் மூன்று

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியான ஐன்ஸ்டீனிடம் எப்பொழுதும் மூன்று மூக்குக்கண்ணாடிகள் இருக்கும்.

இத்தனை கண்ணாடிகள் எதற்கு? என்று ஒருவர் கேட்டார்.

"படிப்பதற்கு ஒன்றைப் பயன்படுத்துகின்றேன். இன்னொன்று தூரப் பார்வைக்கு உபயோகிக்கின்றேன் இந்த இரண்டும் அடிக்கடி காணமல் போய்விடுவதால் அவற்றைத் தேடுவதற்காக மூன்றாவதை வைத்திருக்கின்றேன்'' எனப் பதில் அளித்தார் ஐன்ஸ்டீன்!

### எலிக்கு வந்த மவுசு

திருமணம் செய்ய விரும்புகிறீர்களா?

செத்த எலி பத்து கொண்டுவாருங்கள்

விவாகரத்து செய்ய விரும்புகிறீர்களா?

இருபத்தைந்து செத்த எலிகளைக் கொண்டு வாருங்கள்.

திருமணத்திற்கும் விவாகரத்திற்கும் இப்படிக் கட்டணம் விதித்திருக்கிறார் ஒரு கிராமத் தலைவர்.

மேற்கு ஜாவாவில் இரண்டாயிரம் கிராமத் தலைவரே செத்த எலிகளைக் கட்டணமாக அறவிடுகிறார்.

உற்பத்தியாகும் அரிசியை அழிக்கும் எலிகளைக் கொன்றொழிப்பதற்காகவே அவர் இப்படிப் புதிய திட்டம் ஒன்றை செயற்படுத்தியிருக்கிறார்

இந்தத் திட்டம் ஒரு வகையில் அவருக்கு வெற்றி.

இரண்டு மாதங்களில் சுமார் 20ஆயிரம் செத்த எலிகள் அவரது அலுவலகத்தில் வந்து குவிந்திருக்கின்றன.

## வயோதிப மாதுவை 30 தடவைகள் குத்தி கொலைசெய்த கன்னியர்கள்

அமெரிக்காவின் சரித்திரத்தில் முதல் தடவையாக — கொலைக்குற்றம் ஒன்றிற்காக—16 வயது இளம்பெண் ஒருவருக்கு மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

78 வயதான விதவைப்பெண் ரூத் பெல்கியை மரக்கறி வெட்டும் கத்தியால் 30க்கும் அதிகமான தடவைகள் குத்திக் கொலைசெய்த குற்றத்திற்கே இத்தண்டனை.

இந்த இளம் பெண்ணுடன் சேர்ந்து இக் கொலைக் குற்றத்தைப் புரிந்த—டீன்-ஏஜ் வயதான — அவளது தோழிகள் மூவருக்கு 25 தொடக்கம் 60 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது

நான்கு பெண்களும் வயோதிப மாதுவைக் கொலைசெய்த பின்னர் அவரிடமிருந்த 10 டாலர் பணத்தையும் பழைய காரையும் எடுத்துச் சென்றனராம்.

'இந்தக்கொலை மனிதாபிமானமற்ற கொடூரமான செயலாகும்' இப்படி நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

(யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி ச. க. விசயரத்தினம் அவர்கள் நீர்கொழும்பில் தொடக்கிவைத்த சைவத் தமிழ்ப்பணியை நிலைபெறச் செய்தவர் திருமதி. ச. விசயரத்தினம் அம்மையார். இவர் சமய சமூக சேவகியாகப் பெரும்பணி புரிந்தவர்

முழுக்க முழுக்க ஆங்கில நாகரிகமும் கத்தோலிக்கத் திருநெறி வழங்கும் நிறைந்த நீர்கொழும்பில் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயமும் விசயரத்தின மகாவித்தியாலயமும் இவர் பணியின் சின்னங்கள்.

இவர் சிவபதமடைந்த 31ஆம் நாள் (31-7-86) நினைவாக இக்கவிதை இங்கு பிரசுரமாகின்றது !

## 'தொண்டுபயில் தூய அன்னை'

இருந்தமிழைச் சிவநெறியை இதயத்தில்
இருத்திமகிழ் எழிலார் ஏந்தல்,
திருந்துகலை விதம்பயின்று நியாயதுரந்
தரனென்னத் திகழ்ந்த செம்மல்,
பெருந்தனவான் விசயரத்னம் பீடுபெற
வந்தமனை எங்கள் அன்னை,
விருந்தோம்பி வள்ளுவனும் வாசுகியும்
என்னவிவர் வாழ்ந்து நின்றார்.

அறங்கிடந்த சிந்தையினர், அருள்பயிலும்
திருவிழியார் அன்புமிக்கார்
திறந்தெரிந்தே எவர்தமையும் தேர்ந்தறிந்து
புரந்துமகிழ் தெய்வப் பாவை,
கறங்கிநின்றே ஓலமிட்டுக் கதறியழ
விசயரத்னக் காவலோனை
மறங்குலவு கூற்றுவனுர் முன்பொருநாள்
கொண்டேனந்தார்; வாழ்வே மாயம்.

கன்னல்மொழி மகளிருடன் மகார்தேற்றக்
கடுந்துயரக் கடலை நீந்தி,
மன்னவனுர் நிறுவுபள்ளி வளர்ந்துயர்ந்து
பயனுதவ வழியும் கண்டார்,
துன்னிவரும் ஏழைகளின் துயர்தீர்த்தே
அவர் மகிழத் தாம்மகிழ்ந்தார்,
தென்பாண்டித் தேவிமட மானியெனச்
சிவப்பணியே செய்து நின்றார்.

சித்தி விநா யகப்பெருமான் சேவடிகள்
மறவாத தெய்வ அன்னை
அத்தனவன் உறைகோயில் தனைப்புதுக்கும்
அரும்பணியில் அருத்தி கொண்டார்,
உத்தமர்கள் துணையோடு தேர்நிலையும்
குடமுழுக்கும் உறவே செய்தார்,
இத்தலத்தே இவர்போல ஏவர்கள்தான்
தொண்டினிலே இன்பங் கண்டார்.
தண்டமிழின் சாயலினர், தமிழ்ப்பண்பின்
உருவானுர், தகவு சான்றர்,
அண்டுநிகர் மொழிமடவார் கற்பினொடு
பொற்பாதி கவின வந்தார்,
மண்டுதுயர் சுட மயங்கும் ஏழைகளின்
வாழ்வதனை மலர வைத்தார்,
தொண்டுபயில் நீர்கொழும்பூர்த் தூயவன்னை
சுரர் பரவும் விருந்தே ஆனுர்.

-பண்டிதர். க. மயில்வாகனனுர்

## சங்க காலத்தில்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

காலங்களில் வரமுடியாத நிலைப்பாடிருந்தது

இவற்றுக்கிடையில் தலைவி தன் உறவினருடன் செல்கையில் தலைவனைச் சந்திக்கின்றாள் எதுவும் பேசமுடியவில்லை தாமரை மலரினை எடுத்து அதன் இதழ்களைக் கூப்பி மாலைப் பொழுதில் வா என்ற தன் காதற் கட்டளையைக் குறிப்பால் உணர்த்துகின்றாள்.

இலக்கியங்கள் காதல் பற்றிச் சித்திரிக்கும் தோறும் தூது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

பெண்கள் தங்கள் தோழியினூடாகவே காதலின் ஆற்றாமையினை வெளிப்படுத்துகின்றனர் தோழியும் இதனை தலைவனுக்கு நேராக உணர்த்தாமல் அதற்குள் சில உள்ளுறை உவமைகளை அமைத்து தலைவனின் மனநிலையினை பாதிக்காத வகையில் கூறுந் தன்மையினை சங்கச் செய்யுள்கள் சித்திரிக்கின்றன

காப்பியங்களும் காதலை வெளிக்கொணரும் கருவியாக அமைகின்றன. சிலப்பதிகாரத்தில் கோவலனதும் கண்ணகியினதும் ஒன்றுபட்ட காதலுணர்வினைச் சித்திரித்த இளங்கோ, கோவலனின் உள்ளத்துக்கு இனிமையைக் கொடுக்கும் கலையம்சம் கண்ணகிக்குத் தெரியாத படியினால் அக்காதல் இடையில் முறிவு பட்டதையும் கூறத் தவறவில்லை

இன்றைய சமுதாயத்திலும் கணவன், மனைவிகளுக்கிடையிலான மோதல்கள் ஏற்படுவதற்கு பிறமனையாளை நாடுவதற்குக் காரணம் அங்கேயே சுட்டிக் காட்டப்பட்டுவிட்டது.

சூழலில் சமுதாய போக்கிற்கு ஏற்ப காதலின் போக்கும் மாற்றமடைகின்றது. கண்களும், கண்களும் சந்தித்து உள்ளத்தில் உணர்வுகள் ஒன்றுபட இருவரும் ஒருவரது மன நிலையினை மற்றவர் புரிந்து கொள்ளும் வகையில் காதல் பிறக்கின்றது

கம்பராமாயணத்தில் கம்பன் காதல் பற்றிய காட்சியில் இராமனும், சீதையும் பார்த்தார்கள்; கண்கள் ஒன்றையொன்று கவ்வின; அத்தோடு நிற்கவில்லை. உண்டன; அத்துடனும் நிலை கொள்ளவில்லை; உணர்வுகள் ஒன்றுபட்டன; காதல் பிறந்தது; கருத்தொருமித்தது- எனக் கற்பனைப்படுத்திக் காட்டுந் தன்மை தெய்வீகக் காதலின் ஆழத்தினையும்.

'அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்' எனும் அடியில் காதலின் உயிர் துடிப்பதையும் நாம் உணர்கின்றோமல்லவா?

அன்றைய சமுதாய சூழலில் தரையைப் பார்த்து மணலில் கோடிடும் அளவிலிருந்த காதல் இன்று கண்களின் சந்திப்பாக மாற்றமடைந்துள்ளதென்பதற்கு கம்பன் காட்டிய காதலுணர்வு சான்றாக அமைகின்றது.

அன்று காதலின் சங்கம் தினைப்புனமாக இருந்தது இன்று சினிமாக்கள், கடற்கரைகள், ஹோட்டல்களாக மாற்றமடைந்துள்ளது.

உலகியல் ரீதியான இத்தன்மையான காதல் முறைகளைப் போன்று ஆத்மீகக் காதல்களையும் இலக்கியங்கள் சித்திரிக்கின்றன இதற்குப் பல்லவர் காலம் தக்க சான்றாக அமைகின்றது.

சாதாரண மனித வாழ்வில் ஒருவர் மீது அன்பு செலுத்துகையில் அவரது குண இயல்புகளைப் பாராட்டுதல் இயல்பாகும். அது போன்று இறைவன் மாட்டு அடியவர் கொண்ட அன்பினை லௌகீக ரீதியான உறவு முறைகளைக் கையாண்டு காதலன் - காதலி பாவத்தில் நாயன்மாரும் [illegible] வெளிப்படுத்தி [illegible]. அப்பர் சுவாமிகள் 'தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என இறைவனுடன் ஐக்கியப்படும் வகையில் காதலுணர்வினையும் ஆண்டாள் தான் கண்ணன் மீது கொண்ட காதலினையும், அக்காதல் நிறைவேற்றப்படாத பட்சத்திலுண்டாகும் ஏக்கத்தினையும், காதலுடன் கூடி இன்புறும் நிலையினையும் மிக உருக்கமாக வெளிப்படுத்துகின்றார்.

'ஓமப் புகை நடுவே ஓரக் கண்ணால் பார்த்து கோமளப் புன்னகையால் குழைந்தேனடி நெஞ்சம்' எனக் கண்ணனைத் தான் மணந்து கொள்ளும் மணக்கோலத்தை கற்பனையில் நிறுத்திப் பாடுகிறார்.

சாதாரண உலகியற் காதலில் காதலுணர்வுகளைப் பிறர்க்கு எடுத்துக் கூறவும் முடியாது. சம்பிரதாயமன்று. ஆனால் ஆத்மீகக் காதலில் மடைதிறந்த வெள்ளம் போல காதலுணர்வினை வெளிக்கொணர முடிகின்றது.

## காலத்தால்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

தது

கிரேக்க உலகத்தோடு ஏற்பட்ட தொடர்புகள் அற்றுப் போகாமல் அவன் காப்பாற்றி வந்தான்

எகிப்தின் அரசனுகிய டாலமியின் தூதனும், மேற்கு ஆசியாவை ஆண்டு வந்த செலூகஸின் மகன் ஆண்டியோகஸ் அனுப்பிய தூதனும் அவனுடைய ராஜ சபையில் வந்திருந்தார்கள்.

வெளிநாடுகளோடு வியாபாரமும் நடந்து வந்தது இந்தியாவிலிருந்து சென்ற அவுரியைக் கொண்டு எகிப்து நாட்டார் தங்கள் துணிகளுக்குச் சாயம் தோய்த்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

அவர்கள் தைலப்பதமிட்ட சவங்களை (மம்மிகளை) இந்திய மஸ்லின் துணிகளில் சுற்றி வைத்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

பீகாரில் சில பழங்

## சிக்கல்களை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக ஒர் ஐந்துவயதுப் பையன் ஒளியின் வேகத்துடன் விண்வெளியில் பிரயாணம் செய்து பின்பு பூமிக்குத் திரும்ப பத்து ஆண்டுகள் எடுக்கிறான். பூமிக்குத் திரும்பியபோது அவனின் வயதென்ன? அல்பேர்ட் ஐன்ஸ்ரைனின் 'சார்பு நிலைக்கொள்கையின் படி (Th ory of Relativity) பையனின் வயது ஐந்து தான். பையன் ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்யும் வரை அவனுக்கு வயது போவதேயில்லை.

கணித அறிஞர் ஒரு பிரச்சினத்தை விடுவிக்க அதிலுள்ள கோலத்தை அல்லது ஒழுங்கை இனங்காணமுயல்கிறார். அதற்கான விதி அல்லது சூத்திர [illegible] முயல்கிறார். எனவே கோலங்களின் கவர்ச்சியில் மகிழ்ச்சிகொள்பவராக அவர் இருக்கவேண்டும். அவரிடம் ஒரு கவிஞனின் அம்சமும் இருக்க வேண்டும். ஏனெனில் கணித அறிஞர் கருத்துக்களோடு தொழிற்படுபவர்; கற்பனைகளோடும் தொழிற்பட வேண்டியவர். அவரின் பணி தர்க்க ரீதியான சிந்தனையோடு சம்பந்தப்பட்டது. வசதியாகக் காத்திருக்கும் நேரம், பிரயாணநேரம் அல்லது மாலைநேர நடையின்போது கூட அவர் ஆய்வில் மூழ்கலாம் பரிசோதனைக் கூடத்திலோ பணிமனையிலோ அல்லது வேறிடத்திலோ எங்கு செய்யப்படினும் அவரின் பணி புத்துணர்வுமிக்கது புதிய உலகம் படைக்க உதவிடும் புனிதமான பணி ✶

## வெப்பத்திலிருந்து தப்புவதற்கு வழி

பிரான்ஸில் அண்மையில் நிலவிய கடும்வெப்பத்தில் கஷ்டப்பட்ட ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டி தமது உடலை குளிர்மையாக்க விரும்பினார்.

அவருக்கு ஒரேயொரு வழிதான் தெரிந்தது.

தான் அணிந்திருந்த உடைகள் எல்லாவற்றையும் கழற்றி எறிந்தார். பிறந்தமேனியாக மோட்டார் சைக்கிளில் ஓடி வந்தார்.

வழியில் இதனைக் கண்ட பொலிஸார் அவரைக் கலைத்துப் பிடித்தனர்

பிறந்த மேனியாகச் சென்றாலும் போக்குவரத்து ஒழுங்குகளை மதித்து அவர் தலையில் 'ஹெல்மட்' அணிந்திருந்ததால் பொலிஸ் அதிகாரிக்கு அவரைப் பிடித்துப்போய்விட்டது.

அவ்வளவுதான். சில உடுப்புகளை அவருக்கு வாங்கிக் கொடுத்து வழக்கு எழுதாமலேயே அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார் அந்த அதிகாரி

## தமிழர்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

றது. அதுமட்டுமல்லாது திருகோணமலை துறைமுகமும் அதன் சுற்றுலும் மாகாணசபையின் அதிகார எல்லையிலிருந்து நீக்கப்படும்.

அப்பகுதியின் நிர்வாக மோ - பொருளாதார அபிவிருத்தியோ சம்பந்தப்பட்ட மாகாண சபைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும்.

அடுத்தவாரம்
பகுதி IV

காலத்துச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து மௌரியர் காலத்துக்கு முன்பே அங்கு கண்ணாடிப் பாத்திரங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

(தொடரும்)

## மற்றவர்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கினால், அந்த பாக்கிங்கைப் பிரிக்கவே மனம் வராது அவ்வளவு நேர்த்தியாக இருக்கும்.

ஜப்பான் பொருள்கள் மீது உலகிற்கு இருக்கும் பிரமைக்கு இதுவும் ஒரு காரணம்.

ஆனால் மனித வாழ்வு அப்படியல்ல. சரக்கு இல்லாதவர்கள் வெறும் விளம்பரத்தின் மூலம் பெறும் வெற்றி நிலைக்காது.

விஷயம் இருக்கிற நீங்கள் நம்மிடம்தான் விஷயம் இருக்கிறதே மற்றவர்கள் வந்து நம்மைக் கண்டு பிடித்துக் கௌரவம் தருவார்கள் என்று சும்மா இருந்துவிடக் கூடாது

இருக்கிற விஷயத்தை ஊர் அறிய உலகு அறிய வெளிப்படுத்தியாக வேண்டும். அப்போது தான் கௌரவம் கிடைக்கும் வெற்றி கிட்டும்.

நம் வெற்றியை வைத்துத்தான் உலகம் நம்மை எடை போடுகின்றது. திறமையை வைத்து அல்ல

ஆகவே—

புகழ் வேண்டும் என்று துடிப்பவர்கள் திறமையை வெற்றியாக மாற்றுவது எப்படி என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திறமை வெறும் அரிசி தான்.

சாப்பிட முடியாது.

வெற்றிதான் சமைத்த உணவு சமைக்கக் கற்றுக் கொள்வோம். ✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிட சஞ்சீவி

## கிரகப்பார்வையில் வருகிற வாரம் நாட்டு நிலை

| திகதி கிழமை | பிரச்சினை ஏற்படக்கூடிய இடங்கள் | பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள் |
|---|---|---|
| 27-7-86 ஞாயிறு | கிழக்கு, மேற்கு மாகாணங்கள் (இரவில்) | பூரம், உத்தரம், சுவாதி, விசாகம், ரேவதி. |
| 28-7-86 திங்கள் | கிழக்கு மாகாணம் (திருகோணமலை மாவட்டம் - அதிகாலையில்), வட மாகாணம் (முற்பகல், இரவில்) | அச்சுவினி, உத்தரம், அத்தம், விசாகம், அனுஷம். |
| 29-7-86 செவ்வாய் | கிழக்கு, வடமத்திய மாகாணங்கள் (பகலில்) | பரணி, அத்தம், சித்திரை, அனுஷம், கேட்டை. |
| 30-7-86 புதன் | மலையகம் (அதிகாலையில்), வடமாகாணம் (இரவில்), கிழக்கு மாகாணம் (திருகோணமலை மாவட்டம் - முற்பகல், இரவில்) | கார்த்திகை, சித்திரை, சுவாதி, கேட்டை, மூலம். |
| 31-7-86 வியாழன் | வடமாகாணம் (அதிகாலையில்), கிழக்கு மாகாணம், மலையகம் (பிற்பகல், இரவில்) | கார்த்திகை, ரோகிணி, சுவாதி, மூலம் பூராடம். |
| 1-8-86 வெள்ளி | மலையகம் (அதிகாலை, இரவில்), கிழக்கு மாகாணம் (பிற்பகல், இரவில்) | ரோகிணி, மிருகசீரிடம், விசாகம், பூராடம், உத்தராடம். |
| 2-8-86 சனி | பொதுவாக அமைதி நிலவும். வடமாகாணம் (மாலையில் | மிருகசீரிடம், திருவாதிரை, விசாகம், அனுஷம், உத்தராடம். திருவோணம். |

- இறையருட்செல்வன் -

# பக்தர்களைக் காக்கும் புனித யாகப்பர் ஆலயம்

## 125 ஆண்டுகள் பூர்த்தி

அனைத்துலக கிறீஸ்தவர்களால் சந்தியோகுமையோர், படையாளி, யக்கோ (யாக்கோப்பு), பெரிய யாகப்பர், படைமிரட்டிச் சந்தியாகப்பர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுபவர் புனித யாகப்பர் — எம்பிரான் யேசுக்கிறீஸ்து நாதரால் அவரது சகோதரன் புனித அருளப்பருடன் "இடியின் மக்கள்" என அழைக்கும் பேறு பெற்றவராவார்.

இப்புனிதரின் திருநாள் ஜூலை மாதம் 25 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபையால் கொண்டாடப்படுகிறது.

இவர் யூத குலத்தில், கலிலேயாவில், செபதேயு சலோமை தம்பதிகளுக்கு மகனாக, — புனித அருளப்பரின் தம்பியாகப் பிறந்தவர்.

தமது சகோதரர்களுடன் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் வேளையில் ஒருநாள் யேசுகிறீஸ்து "என் பின்னே வாருங்கள்; உங்களை மனிதர்களைப் பிடிப்பவர்கள் ஆக்குவேன்" என்று அழைத்தார்கள்.

உடனடியாக தமது சகோதரர் அருளப்பருடன் தாய், தந்தையரை விட்டு யேசுவைப் பின் தொடர்ந்தார், யாகப்பர்.

யேசுவின் மரணத்தின் பின் ஸ்பானியா தேசம் சென்று யேசுவின் போதனைகளைப் பரப்பினார்.

தேவதாயாரிடத்தில் விசேட அருள் வரம் பெற்றிருந்த யாகப்பர்,- ஜெருசலேமில் தாம் மரணிக்கவிருப்பதை முன்னறிவித்தார்.

அவ்விதமே மரணித்து அப்போஸ்தலர்களுள் முதல் வேதசாட்சியானார்.

இப்புனிதரின் பெயர் கொண்ட ஆலயங்கள் வடபகுதியில் குருநகர், வயாவிளான் ஆகிய இடங்களில் உள்ளன.

குருநகரில் உள்ள ஆலயம் 125 ஆவது வருடப் பூர்த்தியை இவ்வருடம் சிறப்பாக —எளிமையாக கொண்டாடுகிறது.

குருகுல மக்கள் என அழைக்கப்படும் இப்பங்கு மக்கள்,சோழநாட்டிலிருந்து சிங்க ஆரியன் எனும் அரசனுடன் போர் வீரர்களாக யாழ் நகரில் வந்து குடியேறியவர்கள்.

தமது பூர்வீகப் பெயரான 'குருநாடு' என்பதை நினைவுகூர தாம் குடியேறிய ஊரை குருவூர் என அழைத்தனர். அது பின்னர் கரையூராகி தற்போது குருநகர் என விளங்குகின்றது.

புனிதயாகப்பர் ஆலயம் 25 - 7 - 1861ல் அதி. வண. பிதா. எஸ். சி. எச். மொறு ஆ. ஒ. எம். ஐ அவர்களால் வடிவமைத்து அடிக்கல் நடப்பட்டது.

ஆனால் அதற்கு முன்பே இவ்விடத்தில் ஓர் ஆலயம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆலயத்தின் உள்ளே உள்ள கல்வெட்டு சான்றுபகர்கிறது. இக்கல்வெட்டில் 1-11-1783ல் வண. பிதா. யோசவ் ஞெபெய்றோ என்பவர் அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பங்கு மக்கள் தமக்கென வரலாறுமிக்க தனித்துவமான ஒரு கொடியைக் கொண்டுள்ளனர். மகரக்கொடி என அன்று அழைக்கப்பட்ட இக்கொடி இன்று குருகுலக் கொடியென அழைக்கப்படுகிறது.

புனித யாகப்பரின் அருள் கொடைகளால் பல அற்புத நிகழ்வுகளை இப்பகுதி மக்கள் அடைந்தனர்.

1934 ஆம் ஆண்டில் ஆலய முகப்பு அத்திவாரத்துள் மண்சரிவால் புதையுண்டு பல மணித்தியாலங்களின் பின் உயிர் மீண்டார் ஒருவர். ச. சவிரியான் என்னும் பெயருடைய அவர் இன்றும் உயிருடன் உள்ளார்.


கொள்ளை நோய் குருநகரைப் பீடித்த சமயம், புனிதரின் திருச்சுரூபம் ஊரைப் பவனியாகச் சுற்றி வந்தமையால் பக்தர்களைப் பெரு நோயிலிருந்து புனிதர் காத்த வரலாறு பலர் அறிந்த தொன்று.

> புனிதயாகப்பர் திருநாள் கத்தோலிக்க திருச்சபையால் ஜூலை மாதம் 25 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது வழக்கம். இப்புனிதரின் பெயர் கொண்ட குருநகர் ஆலயம் தனது 125 ஆவது ஆண்டு நிறைவினை கொண்டாடுவது கருதி இக்கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

- ஆர். ரி -

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 26



அனுப்புவோர் பெயர்: ........................

விலாசம் ........................

........................

ஒப்பம்/ ........................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல்வாரத்தில் வெளியாகும்.

**மேலிருந்து கீழ்**

1. எந்நேரமும்
2. பின்னுதல்
3. பிரமிப்பு
4. தேவலோகத்து ஆடலரசி
5. காப்பிய நாயகி
8. பரீட்சை
11. யாகம்
12. ஒட்டுவதற்குத் தேவை
13. ஒருவகை மீன்
14. ஒன்று
15. எல்லையில் கட்டுவது
17. ஒரு உலோகம்
18. பாடல்
19. திறல்
21. ரக

**இடமிருந்து வலம்**

1. பெருங்கடல்
6. கனம்
7. விதவையின் நிலை- 'மை' இழந்துள்ளது
8. மரங்கள் சேர்வதால் வருவது
9. இது வெட்டுவதற்குப் போனபோது தான் அரிச்சந்திரன் மகன் பாம்பின் கடிக்கு இலக்கானான்
10. மருந்து
12. முருகனின் ஆயுதம்
12. வடக்கின் கற்பக தரு
14. சத்தம்
16. கணபதி
19. தெரு
20. விதை
21. கைக்கு ஐந்து
22. நாங்கள்
23. ஆங்கில வருடத்தில் முதலில் வருவது

### சொற்சிலம்பம் இல. 24 விடைகள்

| இடமிருந்து வலம் | | மேலிருந்து கீழ் | |
|---|---|---|---|
| 1. சபதம் | 4. தபசி | 1. சதங்கை | 2 பல |
| 6. தலம் | 7. காவல் | 3. தம்பி | 4. தவம் |
| 8. பிரியம் | 10. கைது | 5. பல் | 7. காயம் |
| 12. கட | 13. விகுதி | 9. கடம் | 11. துவி |
| 16. தவம் | 18. மணி | 12. கலை | 14. குமரி |
| மேகலை | 20. சமரி | 15. திணி | 16 நகரு |
| 22. திரு | 24. திரை | 17. அசதி | 19. மேதினி |
| 25. கனி | 26. அழி | 21. மரை | 23. அழி. |

### சொற்சிலம்பம் இல. 24 வெற்றி பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- க. நாகேந்திரன், 64, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

இரண்டாம் பரிசு:- வ. தணிகாசலம் அஞ்சல் அலுவலகம் வருத்தித்துறை.

மூன்றாம் பரிசு:- சி சங்கரதாஸ், 'சக்தி வாசா' சுன்னாகம் தெற்கு.

* பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்.

# சும்மா தெரியாதே...

"எங்கை இந்தப் பக்கம்?"

"இந்தப்பக்கம் சும்மா ஒருக்கா வந்தாப்போலை; உன்னையும் ஒருக்கா சும்மா பாத்திட்டுப் போவமெண்டு...?,

'நீயாவது சும்மாவாறதாவது. சோளியன் குடுமி சும்மா ஆடாதே... நல்ல சேட் ஒன்று போட்டிருக்கிறாய்...?'

'சும்மா தெரியாதே... ஒரு சினேகிதன் வெளிநாட்டிலிருந்து வந்தவன் அவன்தான் சும்மா தந்தவன்'

இப்ப என்ன செய்கிறாய்? ஏதாவது தொழில்..?

'இல்லை, சும்மாதான் இருக்கிறன்'

'அப்ப பொழுது எப்படிப் போகுது?'

'பொழுது தன் பாட்டிலை சும்மா போகுது.'

சும்மா என்ற இந்தச் சொல்லுக்கு நாம் நமது பேச்சிலே எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

சும்மா என்ற சொல்லுக்கு உண்மையான கருத்து 'ஒன்றுமில்லை' என்பதாகும்.

இந்த ஒன்றுமில்லை என்பதுக்குத்தான் நாம் என்றுமில்லாதவாறு முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

'சும்மா' என்ற சொல்லுக்கு அகராதியிலுள்ள கருத்துக்கள் பல. அவை யாவன.

இலவசம், விருதா, வீண் தொழிலின்றி, இயல்பாய், அமைதியாய், வறிதாக, காரணமின்றி, பயனின்றி, கருத்தின்றி, விளையாட்டாய், இலவசமாய், தடையின்றி, அடிக்கடி, தொழிற்படாமையாய், விருதாவாய், முகாந்திரமில்லாமல், ஒழியாமல்...

இவ்வாறு சும்மாவுக்கு தமிழில் பல கருத்துக்கள் இருப்பதால்தான் தமிழனும் பல விஷயங்களில் சும்மா இருக்கிறான்.

இதையிட்டு ஒரு கதையும் உண்டு.

ஒரு தமிழன், ஒரு ஆங்கிலேயன், ஒரு அமெரிக்கன் ஆகியோர் இறைவனிடம் சென்றனர். தமது நாட்டையும் மொழியையும் மேம்படுத்த வரம் வாங்கவே அவர்கள் சென்றனர்.

இறைவனும் அவர்களை ஒவ்வொருவராக அழைத்து வேண்டும் வரத்தை கேட்டார்.

அமெரிக்கனே தான் உலகை ஆளவேண்டுமென்றான். இறைவனும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

-வயவையூர் ரட்ணு-

## 5ம்பக்கத்தில்

ஐந்தாம் பக்கத்தில் "மூவாயிரம் ஆண்டுகள் போயினும் மறவோம்" என்ற கவிதையின் 23 ஆம் வரியில் வீரமறவர்கள் என்பதற்கு வீரமற்றவர்கள் என்று அச்சாகிவிட்டது. அதைத் திருத்தி வாசிக்கவும்.


## எங்கள்சேவை

### மணமகன் தேவை

யாழ் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதை உடைய எட்டில் செவ்வாய் தோஷமுள்ள 5' 6'' உயரமுடைய பெண்ணுக்கு அரசாங்க, கூட்டுத்தாபன, வங்கி, ஆசிரிய தொழிலை உடைய மணமகன் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சீதனம் வழங்கப்படும். முழு விபரங்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும் 32, சாமி மங்கை, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

### வெளிநாட்டுக்கு பிரயாண ஒழுங்கு

என்னிடம் வெளிநாடு செல்ல பாஸ்போட் கொடுத்தவர்கள் உடன் எனது முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். க. மகேந்திரன்

### கிருஷ்ணு அப்பளம்

எங்கள் புழக்கத்திலுள்ள இரட்டைப் புலி மார்க் லேபல் போடப்பட்டுப் புது முறையில் தயாரிக்கப்பட்ட திறம் அப்பளத்தை வாங்கி உபயோகியுங்கள். ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும். மறவாதீர்கள்

கிருஷ்ணு அப்பளம் புலவனூர் வீதி, கல்வியங்காடு

## பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியூ, (கவீர் கல்லூரிக்கருகாமையில்) மானிப்பாய்.


# மக்கள் அவலமுற...

(3ஆம் பக்க தொடர்ச்சி) வரவேற்கின்றனர்.

சமகால நிகழ்ச்சிகளாக தென்னாபிரிக்காவில் நடைபெறும் இன ஒதுக்கல்களையும் அரச வன்முறைச் செயல்களையும் தாங்கமாட்டாமல் அந்நாட்டு கறுப்பின கத்தோலிக்க ஆயர் டுட்டோ அவர்கள் அரசுக்கெதிரான கூட்டங்களில் பகிரங்கமாகத் தோன்றித் தமது கண்டன உரைகளால் அரசை வன்மையாகச் சாடுவதை நியாயப்படுத்துகின்றோம்.

அவர் செய்வது சரியாயின் யாழ் ஆயரின் இக் கோரிக்கையும் எமக்கு ஏற்புடையதே.

பிலிப்பீன்ஸ் நாட்டின் மார்கோஸ் அரசுக்கெதிராக அன்று அந்நாட்டு ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் பொதுநிலையினர் கண்டனத்தீர்மானங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்தியதை நியாயப்படுத்துகிறோம்.

அப்படியாயின் எமது ஆயரின் கோரிக்கையும் எமக்கு ஏற்புடையதே.

மேலும், இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல்களை அவைகளின் தாங்கொணாத் தன்மையை நன்கு ஆழமாகப் புரிந்து கொண்டதினாலன்றோ புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரும் ஆன்மீக ரீதியில் கடைசி எத்தனமாக இலங்கைக்காக இறைவனை மன்றாடுங்கள்' என அகில உலக மாந்தரையும் சிறப்பாக உலகின் அனைத்து ஆயர்களையும் பரிவுடன் கேட்டிருக்கிறார்.

அதே நோக்கிலேயே யாழ்ப்பாணம் இராசகுருப்பிரசாதி அவர்களின் கோரிக்கையும் எமக்கு ஏற்புடையதாகும்.

ஆனதா கண்காணாத ஒரு நிலையில் இருந்து கொண்டு- பாதிக்கப்படும் மக்கள் வாழும் எல்லைப் புறங்களுக்கு அப்பால் இருந்துகொண்டு - தொலைத்தொடர்புச் சாதனங்களால் தெரிவிக்கப்படும் உண்மைக் கிரகிப்புக்கு அறவே பொருத்தமற்ற அறிக்கைகளை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு- விடுக்கப்பட்டிருக்கும் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் நிராகரிப்புக்கு யாழ் மறைமாவட்ட கத்தோலிக்கர் எவ்வகையிலும் உடன்பாடானவர்களல்லர் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதேவேளை எமது கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் மட்டில் எமக்குரிய உள்ளார்ந்த அன்பும் கீழ்ப்படிவும் இணக்கமும் இன்று போல் என்றும் தொடர்ந்து நிலைத்திருக்குமென்பதையும் தெளிவுபடுத்திக் கொள்ளுகிறோம். ★

# எல்லா இன...

(2-ம் பக்கத் தொடர்ச்சி) துக் கொள்ளும் அரசாங்கம் முறை பெரும் சிக்கல்களை உருவாக்கும்.

சமஷ்டி அரசாங்கம் ஒன்றின் கீழ் ஒவ்வொரு சமஷ்டி அமைப்பும் பூரண அதிகாரங்களைப் பெற்று இருக்கும். இந்த சமஷ்டி அமைப்புக்கள் ஒன்றுபட்டு ஒன்று அல்லது இரண்டு சபைகளை அமைத்து நாடு முழுவதையும் பாதிக்கும் விஷயங்கள் குறித்து ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

இப்படியான அரசாங்கம் தான் அமெரிக்காவில் உள்ளது. டொமினியன் அந்தஸ்தில் உள்ள ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலும் இதே அரசமைப்பு முறைதான் உள்ளது.

### சுவிஸ் நல்ல உதாரணம்

இலங்கைக்கு நல்ல உதாரணமாக சுவிட்சர்லாந்து அரசமைப்பு முறை விளங்குகின்றது.

சுவிட்சர்லாந்து ஒரு சிறிய நாடு. பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி மொழிகள் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ளன.

சமஷ்டி அரசமைப்பு முறை மிக வெற்றிகரமாக சுவிஸ் நாட்டில் அமுல் நடத்தப்படுகிறது.

சுவிஸில் ஒவ்வொரு கன்டனும் தனது விவகாரங்களைச் சொந்தமாகக் கவனித்துக்கொள்கிறது. வெளிவிவகாரம், வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் முரண்பாடுகள், வேறுபாடுகள் உள்ள விஷயங்கள் எல்லாம் சமஷ்டி நாடாளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன.

### மாகாண சுயாட்சி

இலங்கையில் ஒவ்வொரு மாகாணமும் பூரண சுயாட்சி பெற்றதாக இருக்கவேண்டும்.

தீவின் வருமானம் பற்றிய அலுவல்களைக் கவனிக்க ஒன்று அல்லது இரண்டு சபைகள் இருக்கவேண்டும்.

இந்த சமஷ்டி அரசமைப்பு முறைக்கு 1001 ஆட்சேபனைகள் எழுப்பப்படலாம் இந்த ஆட்சேபனைகள் நீக்கப்பட்டபின்னர், ஏதாவது ஒரு வகையான சமஷ்டி அரசாங்கம் ஒன்றினால் தான் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இது எனது திடமான நம்பிக்கை.

சிறிய சமூகங்கள்பற்றி நான் ஒன்றும் கூறவில்லை. அப்படியான சமூகங்களுக்கு விசேட பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய தற்காலிக ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

ஒரு சமூகத்தின் மீது மற்றச் சமூகம் ஆதிக்கம் செலுத்தும் என்ற பயம் நீங்கும் வரை இத்தற்காலிக ஏற்பாடுகள் இருக்கலாம்.

இதே நடைமுறையைத்தான் கொழும்பு தமிழ் ஆசனத்துக்கும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது எனது ஆலோசனை.

நாட்டில் உள்ள மூன்று முக்கிய பிரிவுகள் வருமாறு; கண்டிச் சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர், தமிழர்கள்.

எல்லோரையும் திருப்திப் படுத்தக்கூடிய ஒரு திட்டத்தைக் காணுவது என்பது கடினமான காரியம். சமஷ்டி அரசமைப்புத் திட்டத்தில் அத்தீர்வு உண்டு.

சமஷ்டியிலும் பார்க்க சிறந்ததான ஒரு திட்டம் இருக்கிறது என்று யாரும் நினைத்தால் அதனை மக்கள் முன் சமர்ப்பிக்கலாம்

மதம் சம்பந்தமான பிரச்சினை சட்டத்தின் கீழ் தீர்வு காணப்படக் கூடிய ஒன்று அல்ல.

நிதி சம்பந்தமான சமபலமற்ற தன்மை முக்கியமான விஷயமாகும். அது போன்றே கல்வி விஷயமும்.

மாகாண சபைகள் பொதுநிதியைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

முரண்பாடுகள் நிறைந்த விஷயம் இது இப்பிரச்சினைகள் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்? தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வாழ்ந்தால் என்ன? இப்படி ஒரு பேச்சாளர் சொன்னார்.

சுயாட்சி அரசாங்கம் இல்லாத ஒரு நாடு, நாடு என்று அழைப்பதற்குக் கூட தகுதியற்றது. அப்படிப்பட்ட நாட்டை இந்த உலகில் இருந்தே அழித்துவிட வேண்டும்.

இப்படி திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா சொன்னார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீலசோப்பை
வாங்கி உபயோகியுங்கள்!
100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி மகாத்மா காந்தியின் நிழற் படங்களை ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி
26 - 07 - 1986 சனிக்கிழமை

காலம் பெறுமதியானது
துரித சலவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்
பாவியுங்கள்!
56 கிறாம் சலவைப் பவுடர் ரூபா 2/- மட்டுமே
20 வெற்று மேலுறைகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# பிளவுபடாத தமிழர் தாயகமும் பிரிவுபடாத இலங்கை நாடும்!

## இப்போதைய அரசியல் புதிர் இது

இனப் பிரச்சினைக்குத் தீர்வு பிரிபடாத நாட்டில் காணப்படவேண்டும்.

இது இலங்கை அரசின் நிலைப்பாடு.

அத்தீர்வு பிளவுபடாத தமிழர் தாயகமாக அமையவேண்டும்.

இது தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு.

கொழும்பில் ஜூலை 13இல் தொடங்கிய அரசு — கூட்டணி பேச்சுக்கள் 11 தினங்கள் தொடர்ந்து இடம்பெற்றன.

கூட்டணித் தலைவர்கள், ஜனாதிபதியை மட்டும் 7 தடவைகள் சந்தித்து 15 மணித்தியாலங்கள்வரை பேசினர்.

இப்பேச்சுக்களின் முடிவிலே தோன்றிய நிலைப்பாடுகள்தான் மேற் சொன்னவை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இருந்து பிரிக்கமுடியாத சங்கமாக இந்த நிலைப்பாடுகள் உருவாகியுள்ளன.

இவை இரண்டும் ஒன்றுக்கு மற்றது பொருத்தமானதா அல்லது எதிரும் புதிருமானதாக இருக்குமா என்பதே இனி அவிழ்க்கப்பட வேண்டிய அரசியல் புதிராகும்

**திருப்பம்**

இதனிடையில் அரசியல் கட்சிகள் மாநாடு புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது

'மார்க்ஸிஸ லெனினவாதிகள்' — என்று ஓயாமல் கூறிவரும் அரசுத் தலைவரின் தலைமையில் நடந்த மாநாட்டின் இறுதி அமர்வில் ஏற்பட்டது அந்தத் திருப்பம்.

'ஆயுதம் தரித்த ஈழம் வாதிகள்'-என்று தமிழ்ப் போராளிகளுக்கு அந்த மாநாட்டில் பெயர் சூட்டப்பட்டது

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி ஆயுதம் தரித்த ஈழ அமைப்புக்களைக் கோருவது என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அரசு 'படியிறங்கி வரும்' சங்கதி தீர்மானத்தின் வாசகத்தில் நன்கு புலப்படுகின்றது

ஒற்றை ஆட்சி அரசமைப்புக்குள்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று டாக்கா, திம்பு, பஹமாஸ், புதுடில்லி மற்றும் இடங்களில் எல்லாம் சொல்லி வந்தனர் இலங்கை அரசுத் தலைவர்கள்

**மாறுப்பட்ட நிலையில்**

ஆளும் அரசியல் கட்சிகள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமோ பழைய நிலைக்கு முற்றிலும் மாறானதாக அமைந்துள்ளது என்பது அரசியல் அவதானிகளின் கருத்து

பிரிபடாத இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண யோசனைகளைச் சமர்ப்பியுங்கள்— இதுதான் போராளி அமைப்புக்களைக் கோரும் மாநாட்டுத் தீர்மானம்

ஒற்றையாட்சி அமைப்புக்குள் தீர்வு காணுவதை விடுத்து —

பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும் என்ற நிலைக்கு இலங்கை அரசு படி இறங்கி வந்துவிட்டது என்றுதானே இதன் அர்த்தம்!

பிளவுபடாத இலங்கை வேண்டும் என்றால் பிளவுபடாத தமிழர் தாயகத்தை அமைக்க வழி செய்யுங்கள் —

இப்படித் தமிழ் பேசும் மக்கள் கேட்பதில் என்ன தப்பு?

இறுதிக்கட்டப் பேச்சுக்கள் உறுதியான நிலைப்பாட்டுக்கு வழி வகுத்துவிட்டன என்று சொல்லலாம்.

'வழவழா கொழகொழா' நிலைபோய்விட்டது

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற ரீதியில் இலங்கை அரசு அரசியல் கட்சி மாநாட்டுத் தீர்மானம் என்ற போர்வையில் போராளி அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது

15 மணித்தியாலப் பேச்சுக்களின் பெறுபேறுகள் பற்றி ஐந்து விடுதலைப் போராளி அமைப்புக்களின் தலைவர்களிடம் கூட்டணித் தலைவர்கள் விளக்கிச் சொல்லப் போகிறார்கள்

அதன் பின்னர் விடுதலைப் போராளிகள் தாம் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பர்.

பிளவுபடாத தமிழர் தாயகம் கிடைத்தால் பிளவுபடாத நாடு இருக்கும்!

எது வேண்டும் சொல் மனமே—இந்த நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டுள்ளது.

உள்ளும் புறமும்
குறுமுனி

## ஏரிக்கரை ஓசை யானையின் ஓசையா?

நம்பினால் நம்புங்கள்; ஆனால் மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள். இந்த எச்சரிக்கையுடன் கீழ் வரும் விஷயத்தைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"நிர்வாக அதிகாரங்களைப் பகிர்வு செய்வதற்கு அப்பால் சென்று நாட்டைப் பிரிப்பதற்கு சமஷ்டி அரசமைப்பு இடமளிக்கவில்லை

மிகச் சின்னஞ் சிறிய நாடான சுவிட்சர்லாந்து உட்பட இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, கனடா ஆகிய நாடுகள் எல்லாம் சமஷ்டி அரசமைப்பைக் கொண்ட நாடுகள்

அந்த நாடுகள் எல்லாம் பலம் வாய்ந்தவையாக நல்ல ஒருமைப்பாட்டுடன் கூடிய நாடுகளாகத்தான் விளங்குகின்றன"

மேற் கண்ட கூற்றை—

* 1926இல் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கூறியிருந்தார்.
* 1949 இல் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த சமயம் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியிருந்தார்.
* 1976 வரை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கூறி வந்தனர்

இப்படி நீங்கள் நினைக்கலாம்

அப்படி நினைத்தால் அது தப்பு!

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கொழும்பு ஆங்கிலத் தினசரி 'டெய்லி நியூஸ்' தான் முதலில் கண்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

அரசின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஏரிக்கரை நாளிதழ் அது.

சமஷ்டியா? சின்னஞ் சிறு இலங்கைக்கு உதவாது— இப்படி 'டெய்லி நியூஸ்' முன்னர் எழுதி வந்தது 22-7-1986-இல் வெளியான 'டெய்லி நியூஸ்' ஆங்கிலத் தினசரியின் ஆசிரியர் தலையங்கத்தில் ஒருபகுதியே மேற்கண்ட கூற்று என்றால் ஆச்சரியப்படாதீர்கள். உண்மை அதுதான்.

ஊதுகுழலின் ஓசை, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே நினைவுபடுத்துகின்றது!

ஆட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம் யானைதான் ஆகையால் ஏரிக்கரை ஓசை ஐதேக ஓசை என்றும் எடுத்துச் சொல்லலாம்.

## டொபியுடன் வான் கடத்தல்

கல்முனை, ஜூலை 26

கல்முனைக்கு வந்து கொண்டிருந்த தென் இலங்கையைச் சேர்ந்த டொபி கம்பெனிக்குச் சொந்தமான வான் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் [illegible] கிழமை இரவு கடத்தப்பட்டது.

வானில் சுமார் ஒன்றரை லட்சம் பெறுமதியான இனிப்பு, டொபி பொருட்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. வானில் வந்த மூன்று ஊழியர்களும் பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டனர் (உ-எ-84)

## போதை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் அவசியம்.

மது போதை வஸ்துகளை அருந்தாதோர் இச் சங்கங்களை நிறுவி சமூகத்தைக் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் எமது சமூகம் கெட்டு ஒழியும்; சீரழியும். சமூக நலன் விரும்பிகளுக்கு இது ஒரு பெரிய சவால்!

## குடா நாடு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரவில்லை

வங்கிகளும் மூடப்பட்டிருந்தன.

ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பகுதிக்கும் நோயாளர் மிக மிகக் குறைவாகவே வந்திருந்தனர்

யாழ் நகரின் பஸ் நிலையப் பகுதியில் வாழை மரங்கள் கட்டப்பட்டு கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (உ-10-6)

## கிழக்கிலும்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கவில்லை

வழக்காளிகள், சட்டத்தரணிகள் சமூகமளிக்காததினால் நீதிமன்றங்கள் இயங்கவில்லை

வியாழன் இரவு முதல் வெள்ளி வரை குண்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன

ஆயுதப்படையினரின் ரோந்தும் அதிகரிக்கப் பட்டிருந்தது

களுவாஞ்சிக் குடியில் பூட்டப்பட்ட கடைகளைத் திறக்கும்படி படையினர் வற்புறுத்தினர். எனினும் கடைகள் திறக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது (உ-எ-21)

## கல்முனையில்

கல்முனை, ஜூலை 26

கல்முனையிலும் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது

கடைகள் பூட்டப்பட்டிருந்தன பாடசாலைகள் இயங்கவில்லை

வாகன நடமாட்டங்கள் நகரில் குறைந்து காணப்பட்டன.

நகரில் அடிக்கடி குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன (உ-எ-84)

## திருமலையில்

திருகோணமலை ஜூலை 26

திருகோணமலை நகரிலும் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது

பாடசாலைகளுக்கு மிகக் குறைந்த தொகை தமிழ் மாணவர்களே சென்றனர்

நகர் அமைதியாகக் காணப்பட்டது. ஆயுதப் படையினர் ரோந்து புரிந்து வந்தனர். (உ-எ-150)

# வெள்ளையர் தனித்து நடத்தும் விளையாட்டுப் போட்டி

## தட்சர் அம்மையாரின் போக்கினால் மகாராணி கவலை

13 துரதிஷ்ட எண் என்பார்கள் அதே போன்று 13 ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளும் பெரும் இழுபறியுடன் ஆரம்பமாகி உள்ளன

இந்தப் பிரச்சினை தொடர்பாக எலிஸபெத் மகாராணியாருக்கும் பிரதமர் மார்கிரட் தட்சருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு பிரிட்டனில் அரசியல் சட்ட நெருக்கடி ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது

பிரதமர் தட்சரின் போக்குக் குறித்து மகாராணியார் பெரிதும் கவலை கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காமன்வெல்த் அமைப்பின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதற்கு இந்தச் சம்பவங்கள் ஒரு முன் எச்சரிக்கை என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

தென் ஆபிரிக்கப் பிரச்சினையே காமன்வெல்த் நெருக்கடிக்குக் காரணம் என்பது வாசகர்கள் அறிந்ததே.

தென் ஆபிரிக்காவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என்று பெரும்பாலான காமன்வெல்த் நாடுகள் பிரிட்டனை வற்புறுத்துகின்றன.

**தட்சர் உடன்பாடில்லை**

பிரிட்டிஷ் பிரதமர் தட்சர் அம்மையார் இதற்கு இணங்கவில்லை இதனை அடுத்தே இந்த அரசியல் விவகாரம் விளையாட்டுக் களத்துக்குள்ளும் புகுந்து காமன்வெல்த்தின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது.

58 உறுப்பு நாடுகளில் 49 நாடுகளே செயற்படுகின்றன; 32 நாடுகள் தற்போது எடின்பரோவில் நடைபெறும் போட்டியைப் பகிஷ்கரிக்கின்றன. 26 நாடுகள் மட்டும் பங்குபற்றுகின்றன இந்த 26 நாடுகளும் வெள்ளையர் நாடுகள். ஆகவே தற்போது நடைபெறுவதைக் காமன்வெல்த் வெள்ளையர் விளையாட்டுப் போட்டி என்றே அழைக்கலாம்.

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்டு வந்தது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்

இந்த சாம்ராஜ்யத்தின் கீழ் ஏராளமான நாடுகள் அடிமைப்பட்டுக் கிடந்தன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு இந்த நாடுகள் பிரிட்டனிடம் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக சுதந்திரம் பெற்றன. சில நாடுகள் போராடிப் பெற்றன. சில போராடாமல் இருக்க சுதந்திரம் வலியவந்தது.

பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளின் அமைப்புத்தான் காமன்வெல்த் ஆகும். ஒரே குடும்பம் போல..

காமன்வெல்த்தின் தலைவியாக பிரிட்டிஷ் மகாராணியார் இருந்து வருகிறார்

பிரிட்டிஷ் அரச பரம்பரையும், காமன்வெல்த் நாடுகளும் பழைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பெருமையை இன்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் தென் ஆபிரிக்கப் பிரச்சினை உருவாகும் வரை காமன்வெல்த் நாடுகளும் மகாராணியாரும் ஒரு குடும்பம் போன்றே செயற்பட்டு வந்தன.

காமன்வெல்த் தால் பிரிட்டனைவிட அங்கத்துவ நாடுகளே கூடிய நன்மைகளைப் பெற்றுவருகின்றன இவையே இந்த அமைப்பு இதுவரை சிதறுண்டு போகாது இருக்கக் காரணம்.

தென் ஆபிரிக்கப் பிரச்சினை முதல் தடவையாக 1961 ஆம் ஆண்டு காமன்வெல்த்தில் நெருக்கடியை உருவாக்கியது அப்போது தென் ஆபிரிக்கா காமன்வெல்த்தில் இருந்து விலகிக்கொண்டதன் மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை தற்போது பொருளாதாரத் தடை என்ற இன்னொரு கோணத்தில் இருந்து நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்று அப்போது எவரும் நினைத்திருக்கமாட்டார்கள்.

உலக உலா
என்.பி.சீலன்

# கோட்டைப் பகுதியில் 4 போராளிகள் மரணம்

யாழ்ப்பாணம் ஜூலை 26

யாழ் கோட்டை முகாமை விட்டுவெளியே வரமுயற்சித்த சிப்பாய்களுடன் மோதலில் ஈடுபட்ட சமயம் தமிழ் ஈழ இராணுவத்தைச் சேர்ந்த நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர் இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றது.

கோட்டை முகாம் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த இரண்டாம் லெப்டினன்ட் செல்வம் (ஓட்டுமடம்), லெப்டினன்ட் பிரபா (கல்வியங்காடு) கோப்ரல் லோகேஸ் (திருமலை), கோப்ரல் ரவி (வவுனியா) ஆகியோரே உயிரிழந்தனர் என தமிழ் ஈழ இராணுவத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

நேற்று அதிகாலை நிகழ்ந்த மோதலில் சிப்பாய்கள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் தமிழ் ஈழ இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் (உ)

## அடித்துக் கொலை

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சி நடத்திவந்த சாய்ந்தமருதைச் சேர்ந்த முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் நிந்தவூரில் நேற்று அடித்துக் கொலைசெய்யப்பட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஏற்பட்ட தகராறே கொலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-14)

# படகு மர்மம் இன்னும் நீடிக்கிறது

தமிழ் மாணவ, மாணவியரையும் அவர்களின் பெற்றோர்களையும் முல்லைத்தீவில் இருந்து திருமலைக்கு ஏற்றிச் சென்ற படகு ஒன்று பற்றிய மர்மம் இன்னும் நீடிக்கின்றது.

காணாமல் போன இப்படகு பற்றிபுதிய தகவல்கள் எதுவும் திருமலை பிரசைகள் குழுவுக்கு நேற்று வரை கிடைக்கவில்லை

இதனிடையில் நேற்றுக் காலை இன்னொரு படகு முல்லைத்தீவில் இருந்து பயணிகளுடன் வந்து சேர்ந்தது

இப்படகில் வந்த பயணிகளை விசாரித்த போது, தாங்கள் வரும் வழியில் வேறு படகுகள் எதையும் காணவில்லை என்று தெரிவித்தனர்.

காணாமற்போனதாகக் கூறும் படகு பற்றியும் அதில் பயணம் செய்த பயணிகள் பற்றியும் விசாரிப்பதாக இணைப் பதிகாரி கேர்ணல் ஜயரத்ன பிரசைகள் குழுவுக்குத் தெரிவித்தார். (உ-எ-150)

# இந்தியத்தமிழ் மீனவர் நினைவுத் தூபி திறப்பு

யாழ்ப்பாணம்: ஜூலை 26

இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்ட 9 இந்தியத் தமிழ் மீனவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வேலணையில் திறந்து வைக்கப்பட்டது

இத்தூபி வேலணை துறையூர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சபையினால் அமைக்கப்பட்டது.

திறப்பு வைபவத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் திரு டேவிற்சன் கலந்துகொண்டு பேசினார்

தமிழக மக்கள், ஈழ மக்கள் கடலால் பிரிக்கப்பட்ட போதும் உள்ளத்து உணர்வுகளால் ஒன்றுபட்டவர்கள்.

கடந்த காலங்களில் ஈழமக்கள் படுகொலையானபோது தமிழக மக்கள் எரிமலை எனப் பொங்கி எழுந்தனர்.

இந்திய, தமிழக மக்கள் குரல் கொடுத்த காரணத்தினால் தான் எமது போராட்டம் சர்வதேச அரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போராட்டமானது.

இதனால் இந்திய மக்களை இலங்கை அரசு எதிரியாகக் கருதுகின்றது

இப்படி திரு டேவிற்சன் சொன்னார். (உ-எ-)

# அரச அலங்காரங்களோடு அன்ட்றூ - ஷாரா திருமணம்

பிரிட்டிஷ் அரசகுடும்பத்தில் திருமணம் என்றால் கேட்கவா வேண்டும்

இளவரசர் அன்ட்றூவுக்கும் ஒரு சாதாரண பெண் ஷாரா பேர்குஷனுக்கும் லண்டனில் சென்ற புதன் அன்று திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்துவிட்டது.

பிரிட்டிஷ் மக்கள் இந்தத் திருமணத்தைத் தங்கள் வீட்டுத் திருமணம் போலவே கொண்டாடி மகிழ்ந்தனர்

மணமகன் அன்ட்றூவுக்கு வயது இருபத்தாறு மணப் பெண் ஷாராவுக்கும் அதே வயதுதான்

செல்வி ஷாரா பேர்குஷன் லண்டன் கலைக்காட்சி நிறுவனமொன்றில் செயலாளராக வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்.

இந்த சாதாரண பெண்ணுக்கும் அரசகுல அன்ட்றூவுக்கும் ஏற்பட்ட தொடர்பு காதலாக மலர்ந்து கனிந்தது அரசர் குடியின் அலங்காரத் திருமண நிகழ்ச்சியாகவும் அது புகழ் பெற்றுவிட்டது

வெஸ்ட் மினிஸ்டர் அபே தேவாலயத்தில் காதலர்கள் கைப்பிடித்துக்கொண்டனர்.

அதைத் தொடர்ந்து அழகிய வெண்புரவிகள் பூட்டிய அலங்கார வண்டியில் பக்கிங்ஹாம் மாளிகைக்கு அவர்கள் கூட்டிச் செல்லப்பட்டார்கள்.

கடந்த பல மாதங்களாக காதல் வானில் சிறகடித்துப் பறந்த சிட்டுக்கள் இந்த அன்ட்றூ — ஷாரா ஜோடி.

திருமணத்தின் பின் தேன்நிலவுப் பயணத்தின் தித்திப்பையும் சுவைக்காமல் அந்தக் காதலராக் ஆறுதல் அடைய முடியுமா?

செசல்ஸ் றோயல் வைத்தியசாலையில் இருந்து அவர்கள் திட்டமிட்டபடி தேன்நிலவுக்கும் பயணம் மேற்கொண்டு விட்டனர்.

ஆடாத ஆட்டம்ஆடிய அரசிளங் குமரன் இந்த அன்ட்றூ — ஆட்டக்காரன் அன்ட்றூ என்றே பத்திரிகைகள் திருநாமப் பட்டம் சூட்டின.

1981 ஆம் ஆண்டு தொடக்கம் அன்ட்றூவின் அந்தரங்க விவகாரங்கள் பற்றி அலசாத பத்திரிகைகளே இல்லை என்று கூறிவிடலாம்.

பல பெண்களோடு தொடர்பு படுத்தி இந்த இளவரசனின் பெயர் சந்திக்கு இழுக்கப்பட்டது.

மொடல் நடிகை 'கூ ஸ்டார்க்' என்னும் பெண்ணுக்கும் அன்ட்றூவுக்கும் இடையில் ஏற்பட்ட காதல் உறவு 1983 வரை இறுகிப் போயிருந்தது.

இதனால் அரண்மனைக்குள்ளும் அதிருப்தி பரவியதாக அன்று பேசப்பட்டது

அன்ட்றூவின் மனைவி ஷாராவும் லேசுப்பட்டவரல்ல அவருக்கும் ஏற்கெனவே இரண்டு காதல் நண்பர்கள் இருந்திருக்கிறார்கள்.

இதை ஷாராவின் தந்தையே பத்திரிகைப் பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே இரண்டு காதல் நண்பர்கள் மகள் ஷாராவுக்கு இருந்திருந்தாலும் இப்பொழுதுதான் 'உண்மையான மனிதரை' அவள் தெரிவு செய்து காதல் கொண்டதாக அவர் அதில் பெருமையாகக் கூறியுள்ளார்.

அரச குடும்பத்துக்குப் பரிச்சயமான திரு. பேர்குஸன் வின்ஸர் கம்பெனியின் போலோ மனேஜர்.

இவரது மனைவி (ஷாராவின் தாய்) ஹெக்டர் பாரன்டே என்ற போலோ விளையாட்டுக்காரரை மணந்து கொண்டு அமெரிக்காவில் வாழ்கிறார். தந்தை பேர்குஸனும் சுஸான் என்னும் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு வாழ்கிறார்

அஸ்கொட் விளையாட்டு நிகழ்ச்சியில் அரும்பிய இந்தக் காதலுக்கு அன்ட்றூவின் அண்ணியார் சார்ள்ஸ் டயானாவே காலாக இருந்திருக்கிறார் அண்ணன்மார் இளவரசர் எட்வட்டும் சார்ள்ஸும் ஆதரவுகாட்டி வந்துள்ளனர்.

தாயார் எலிஸபெத் மகாராணியாரும் இதனால் பெருமகிழ்ச்சி அடைந்து யோர்க் பகுதியின் முடிக்குரிய இளவலாக அன்ட்றூவை ஆக்கியுள்ளார். யோர்க்கின் இளவரசியாக ஷாரா பேர்குஸன் மாறி அரசகுல அந்தஸ்தை அடைந்து விட்டார்.

பள்ளிப் பருவத்தில் அழகில்லாத அசட்டுப் பெண் என்று கருதப்பட்ட ஷாராவுக்கு அரசபோகம் கிடைத்தது அதிஷ்டம் தான் என்று அங்கலாய்ப்பவர்களும் அங்கு இல்லாமல் இல்லை

- யுகன் -

## சும்மா தெரியாதே...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படியே ஆகட்டும் என்றார்.

ஆங்கிலேயனோ தனது பாஷை உலகம் முழுவதும் வியாபிக்கவேண்டும் என்று கேட்டான் அதற்கு சம்மதித்தார்.

அடுத்தபடியாக இறைவன் தமிழனை அழைத்து வந்த காரணம் யாதென வினவினார். தமிழன் தலையைச் சொறிந்தபடி 'சும்மா... வந்த இடத்தில்... உங்களை ஒருக்கா சும்மா பாத்திட்டுப் போவமெண்டு.' என்று வழமைபோல் பேசத் தொடங்கினான்.

இறைவனும் 'சரி அவ்வாறே நடக்கட்டும்' என்றார்.

தமிழனும் அவ்வாறே சென்று சும்மா இருக்கலானான்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது. திகதி 26—07—1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org